விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 புரட்டாதி 27 முஹற 17 இதழ் 241
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 13-10-84

தபாலகங்களில் ஒய்வூதியம்பெற்றோர்

## குருநகர் மக்கள் வங்கியில் ஒய்வூதியம் பெறலாம்

### தீபாவளியையொட்டி விசேட ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

தபால் அலுவலகங்கள் மூலம் ஒய்வூதியம் பெற்றுவந்த அனைவருக்கும் குருநகர் மக்கள் வங்கிக் கட்டிடத்தில் ஒய் வூ தியத்தை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தபாலகங்கள்மூலம் ஒய்வூதியம் வழங்குவதில் பாதுகாப்புப் பிரச்னைகள் எழுந்ததையடுத்து சமீபகாலமாக யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் ஒய்வூதியம் வழங்கப்பட்டுவந்தது. எதிர்வரும் தீபாவளிப் பண்டிகையை உத்தேசித்தும், வேறு காரணங்களையொட்டியும் தபாலகங்களில் ஒய்வூதியம் பெற்று வந்த அனைவருக்கும் இனி மேல் குருநகர் மக்கள் வங்கிக் கட்டிடத்தில் அதனை வழங்குவதற்கு யாழ். அரச அதிபரும், மாவட்ட அமைச்சுச் செயலாளருமான திரு மு. பஞ்சலிங்

(5-ம் பக்கம் பார்க்க)

# பிரி. பிரதமரும் மந்திரிகளும் மயிரிழையில் உயிர் தப்பினர்!

## கட்சிக் கூட்டத்தில் குண்டுவெடிப்பு
## 4 பேர் மரணம்; 26 பேர் காயம்

(லண்டன்)

பிரிட்டிஷ் பிரதம மந்திரி திருமதி மார்கிரெட் தாட்சரும் வேறு பல சிரேஷ்ட அமைச்சர்களும் கொலை முயற்சியிலிருந்து தெய்வாதீனமாக உயிர் தப்பினுர்கள்.

ஆளும் கன்சர்வேடிவ் கட்சியின் மகாநாடு நடந்துகொண்டிருந்த ஹோட்டலில் குண்டு ஒன்றை வெடிக்கச் செய்ததன் மூலம் இந்தக் கொலை முயற்சி நடைபெற்றது.

கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த மண்டபத்தில் பெரும் சத்தத்துடன் குண்டு

[8ம் பக்கம் பார்க்க]

சர்வகட்சி மகாநாடு

## செய்திகளுக்கு தொடர்ந்து பத்திரிகைத் தணிக்கை

[கொழும்பு]

''பத்திரிகைத் தணிக்கை ரத்துச் செய்யப்பட்டபோதிலும், சர்வகட்சி மகாநாடு தொடர்பான செய்திகளுக்குப் பத்திரிகைத் தணிக்கை தொடர்ந்து அமுலிலிருக்கும்,''

[8ம் பக்கம் பாாக்க]

## கடத்தப்பட்ட சடலங்கள் முறைப்படி தகனம்?

[யாழ்ப்பாணம்]

யாழ். ஆஸ்பத்திரிப் பிரேத அறையிலிருந்து கடத்திச்செல்லப்பட்ட இருசடலங்களும், சம்பந்தப்பட்ட இளைஞர்களால் மயானம் ஒன்றில் நேற்றுமுன்தினம் முறைப்படி தகனம் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

யாழ் நகருக்கு அருகிலுள்ள மயானம் ஒன்றிலேயே சடலங்கள் தகனம் செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

## இராணுவம் சோதனை

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை - அச்சுவேலி வீதியில் இராணுவத்தினர்

[8ம் பக்கம் பார்க்க]

## தஞ்சம்தர மறுக்கும்நாட்டுக்கு எதிராக இங்கு நடவடிக்கை?

(யாழ்ப்பாணம்)

வெளிநாடொன்றில் தஞ்சம் கோரியிருக்கும் தமிழ் அகதிகள் சம்பந்தமாக அந்தநாடு எடுக்கவிருக்கும் பாதகமான நடவடிக்கைகளைக் கைவிடச்செய்யும் விதத்தில் இங்கு எதிர்நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சிகள் நடைபெறுவதாகத் தெரிகிறது.

குறிப்பிட்ட நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால்மா உணவுப் பொருட்களையும் மற்றும் விவசாயம் சம்பந்தமான பொருட்களையும் வாங்காது பகிஷ்கரிக்கும்படி தமிழ்மக்களைத் தூண்டுவதற்கு குழுவொன்று தீவிரமாக முயற்சி எடுக்கப்போவதாகத்

(8ம் பக்கம் பார்க்க)

## சடலம் கடத்தல் பொலிசில் புகார்

[யாழ்ப்பாணம்]

யாழ். அரசினர் ஆஸ்பத்திரியிலிருந்து இரு இளைஞர்களின் சடலங்கள் கடத்திச் செல்லப்பட்டதுபற்றி யாழ் ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் நேற்று முன்தினம் பொலிசில்

(8ம் பக்கம் பார்க்க)

காலி பூஸாமுகாம்

## இளைஞர் கடிதங்கள் அனுப்பிவைப்பு

[யாழ்ப்பாணம்]

காலி பூஸா முகாமிலுள்ள இளைஞர்களினுல் அவர்களின் பெற்றோர்களுக்கு எழுதப்பட்ட கடிதங்கள் நேற்று யாழ். அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

யாழ். அரச அதிபர் இக்கடி

[8ம் பக்கம் பார்க்க]

SAKURA TRAVELS

உலகின் எந்தப் பாகத்திற்கும் பிரயாணம் செய்ய தேவையான விமான ரிக்கற்றுக்களை குறைந்த விலையிலும் கூடிய விரைவிலும் பெற்றுக்கொள்ள உடன் தொடர்பு கொள்ளுங்கள்

SAKURA TRAVELS



BERLIN பிரயாணம் செய்வோருக்கு யாழ்ப்பாணத்திலேயே ரிக்கற் குறைந்த விலையில் பதிவுசெய்து கொடுக்கப்படும்.

ஆசனங்களை நாமே பதிவுசெய்து கொடுப்போம்.

ஒவ்வொரு செவ்வாய், சனி நாட்களில் விமான சேவை உண்டு.

காசோலைகளும் (TRAVEI LERS CHEQUE) இங்கேயே பெற்றுக் கொடுக்கப்படும்.



உடன் தொடர்புகொள்ளுங்கள்

SAKURA TRAVELS

233 1/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

152

வடக்குக் கிழக்கு நிலைமைகளை அறிய

## ஜனதிபதிக்கு ராஜதுரை விடுத்துள்ள யோசனை!

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணங்களில்ஏற்பட்டுள்ள நிலமைகளையும் அங்குள்ளபொதுமக்களின் மன நிலைகளையும் தெளிவாக அறிந்துகொள்ளும் விதத்தில் அப்பகுதிகளைச் சேர்ந்த அரச அதிபர்கள், மாவட்ட அமைச்சர்கள், சமயத்தலைவர்கள், பொதுஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் போன்றவர்களைக் கொண்ட மாநாடொன்றை நடத்த வேண்டும் என்று நேற்று ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை நேரில் சந்தித்து உரையாடிய பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு செல்லையா ராஜதுரை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார்

அப்பிரதேசஙகளில் உள்ள

(8-ம் பக்கம் பார்க்க)

## எம்.ஜி. ஆர். உடல்நிலை

[சென்னை]

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனின் உடல்நிலை நன்கு தேறியுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச் வி. ஹண்டே நேற்று தமிழ் நாடு சட்டப் பேரவையில் தெரிவித்தார்

முதலமைச்சர் எம். ஜி ராமச்சந்திரன் உற்சாகமாகவும், சுறுசுறுப்பாகவு மிருப்பதாக அவர் கூறினுர். [வெ]

## இலங்கைத் தமிழர் நிலை இந்திரா பெரும் கவலை!

### புதுடில்லியில் சிவாஜி தகவல்

புதுடில்லி, அக். 12

'இலங்கைத் தமிழர்பிரச்னை தொடர்பாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி பெரும் கவலையும் வேதனையும் கொண்டுள்ளார் இலங்கைப் பிரச்னை தொடர்பாக திருமதி இந்திராகாந்தி எடுக்கும் முயற்சியை தமிழ்நாட்டு மக்கள் ஆதரிப்பார்கள்'' என்று ராஜ்ய சபை உறுப்பினர் திரு. சிவாஜி கணேசன் குறிப்பி டுள்ளார்.

நேற்று பிரதமர் திருமதி இந்திரா காந்தியை புதுடில்லியில் சந்தித்து சுமார் அரைமணி நேரம் பேச்சு நடத்திய பின்னர் கருத்து தெரிவிக்கையில்

(8ம் பக்கம் பார்க்க)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

தையல் நூல் சம்பந்தமான எல்லாமெஷின்களும்கொண்ட ஒரு கைத்தொழிற்சாலை விற்பனைக்குண்டு. தொடர்பு: மோகன் 105, சென் செபஸ்தியன் வீதி, கொழும்பு–12. 107

கல்வியங்காடு டச் ரேட்டில் 5 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: க.சண்முகரத்தினம், சட்டத்தரணி, 3ம் கட்டை, கல்வியங்காடு. 156

யாழ்ப்பாணத்தில் ½ பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: இல 9, 5ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (யாழ். கன்னியர் மடத்திற்கு அருகாமையில்) 163

பருத்தித்துறை"யில் ஒரு அச்சகம் உடனடியாக விலைக்கு உண்டு. அதன் அச்சடிக்கும் இயந்திரத்தை தனியாகவோ அல்லது முழுதளபாடங்களுடனோஎடுக்கலாம் தொடர்பு கொள்ளவும். 'பிறேமா இல்லம்', வி. எம். வீதி, பருத்தித்துறை. 154

யாழ்ப்பாணம் பிறவுண் ரேட்டில் வீடுகட்டக் கூடிய 4¼ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (பல்கலைக்கழகத்திற்கும், தொழில்நுட்பக் கல்லூரிக்கும் அண்மையில் உள்ளது) தொடர்பு: கே. ஐயாறு, சேர் பொன். ராமநாதன் ரேட், யாழ்ப்பாணம். 131

நல்லூருக்கு அருகாமையில் நல்ல சுற்றுடலில் 1½ பரப்பு காணி விற்பனைக்குண்டு, தொடர்பு: ச. இராமநாதன், 124, சிவன்கோவில் வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். 129

ஒரு புத்தம் புதிய Olivertte Typewriter (Portable) Calculaters விற்பனைக்குண்டு. தொடர்பு: 21, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். 169

புத்தம்புதிய'KUBOTA-75, லான்ட் மாஸ்டர் இயந்திரம் கலப்பையுடன் விற்பனைக்குண்டு, செல்வநாயகம்— எல்லுமுள்ளி, மானிப்பாய் மேற்கு, மானிப்பாய். (M. O. H. ஒழுங்கை) (122)

பாவித்த குளிர்சாதனப் பெட்டி துவிச்சக்கரவண்டி வீட்டுப்பாவனைப் பொருட்கள் மற்றும் மின்சாரப்பொருட்கள் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு ''கலைச்சோலை'' இல 8 இந்துமகளிர் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். [140]

கொடிகாமம் புகையிரத நிலையத்தில் இருந்து கொடிகாமம், யாழ்ப்பாணம் வழியில் இருநூறுயார் தூரத்தில் புகையிரத குறிக்காட்டிக்கு அருகாமையில் 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. கடிதமூலமோ, நேரிலோ தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:- தி. பொன்னம்பலநாதன் அரசினர் ஆஸ்பத்திரி கொடிகாமம். [126]

## தேவை

இந்து உயர் வேளாள குலத்தைச்சேர்ந்த அவுஸ்திரேலியாவில் (Staff Post) வகிக்கும் 2ல் செவ்வாய் உள்ள 35 வயதுமகனுக்கு படித்த அழகுள்ள 5' 4''க்குள் உயரமுள்ள பெண் தேவை, குறிப்பு, படம் முதலிய விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பொருத்தமற்றது பண்புடன் திருப்பிஅனுப்பப்படும். விளம்பர இல. 153, C/o ஈழநாடு. 153

## தேவை

பெண்களினதும் பிள்ளைகளினதும் உடுப்புக்கள் தைப்பதற்கு நன்கு தேர்ச்சி பெற்ற பெண் தையல்காரர்கள் உடன் தேவை. திறமைக்குத் தக்க ஊதியம் கொடுக்கப்படும். விவேகானந்தாரெக்ஸ்ரைல்ஸ், 22, பெரியகடை. யாழ்ப்பாணம். 164

யாழ். நகரில் பிரபலமான ஸ்ரூடியோவிற்கு றீ-ரச்சிங், பினிசிங் வேலையில் அனுபவம் உள்ள அல்லது ஆர்வமுள்ள பெண் பிள்ளைகள் (வயது 16—20) தேவை மாநகரசபை எல்லையினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். 20ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். சித்திராலயா, 18, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 159

## WANTED

Audit Seniors and Audit Trainees, in a firm of Chartered Accountants housing branch in Jaffna. Apply Canagasooryam and Co., 272, Point Pedro Road, Nallur, Jaffna. 141

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்டநீதிமன்றம்
யாழ்ப்பாணம்

உரும்பிராய் கிழக்கு உரும்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்ற நன்னியன் இராசன் என்பவரின் மரணசாதனமில்லா சொத்துக்கள் தொடர்பான விடயத்தில்.

— மரணமெய்தியவர்

வழக்கு இல:
தத்துவம்/3822

நன்னியன் இராசன் கைம்பெண் தவமணி
யோகபுரம், உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

மனுதார்.

எதிராக

1. இராசன் மகன் சிவகுமார்
2. இராசன் மகள் லதாயினி
3. இராசன் மகள் கலாநிதி
4. இராசன் மகன் சிவரூபன்
5. இராசன் மகன் சிவகரன் எல்லோரும் பராயமடையாதவர்கள்.
6. சின்னத்தம்பி வசந்தன் எல்லோரும் யோகபுரம், உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

— எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு, மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக; மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 2ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இம்மன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனகட்டளையாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1984 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 10 ம் திகதி இன்று முத்திரையிடப்பட்டது.

நீதிமன்றக்கட்டளைப்படி

**கு. குலசிங்கம்**
பதிவாளர்

என்னால் வரையப்பட்டது.

**ந. அருள்சாகரன்**
மனுதாரின் சட்டத்தரணி. 145

## வாடகைக்கு

கந்தர்மடத்தில் 4 அறைகளுடன் சகல வசதிகள் கொண்ட வீடு உடன் வாடகைக்குண்டு. 190, அரசடி ரேட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (121)

திருநெல்வேலியில் நல்ல இடத்தில் இரண்டு கடைகள் வாடகைக்கு உள்ளன. கடித மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 158, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 158

யாழ். மாட்டின் ஒழுங்கை 37ம் இலக்கத்தில் சகல நவீன வசதிகளுடன் நாலு அறைகள் கொண்ட புதியவீடு வாடகைக்குண்டு. விபரங்கட்கு: 21,வேம்படி வீதி, யாழ்ப்பாணம், 170

## தவறிவிட்டது

ஏழாலைப்பகுதியில் உரும்பிராயைச் சேர்ந்தவரதும், அளவெட்டியைச் சேர்ந்தவரதும் அடையாள அட்டைகள் கொண்ட பை தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து R. சாந்தகுமார், இராவத்தை, அளவெட்டியில் ஒப்படைக்கவும். 162

எனது அடையாள அட்டை (52267204 X) இலக்கமுடையது. சி.தில்லைமணி, வட்டு கிழக்கு, சித்தங்கேணி என்னும் விலாசமுடையது தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் நல்லை ஆதீனத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். 165

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட
நீதிமன்றம்

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த கந்தப்பிள்ளை கைம்பெண் பத்தினிப்பிள்ளையின் மரணசாதன மற்ற மரணச்சொத்தினதும் உடமைப்பொருள்களினதும் விடயத்தில்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல. ரி 213

மரணமெய்தியவர்.

1. தாமோதரம்பிள்ளை சத்தியநாதனும்.
2. பெண் செல்வமணியும், மாவிட்டபுரம்.

மனுதார்கள்

எதிராக

கந்தப்பிள்ளை மகள் சின்னத்தங்கச்சி
கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலேபெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 17-ஆந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளை ஆக்கப்படலாகாதென்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1984 ம் ஆண்டு ஆவணி மாதம் 22ம் திகதி.

**ஆழ்வார் சிவபாதசுந்தரம்**
(ஒப்பம்)
நீதிமன்றக் கட்டளைப்படி
பதிவாளர்.

என்னால்தயாரிக்கப்பட்டது.

**ம. சிதம்பரநாதன்**
(ஒப்பம்)
மனுதாரின் சட்டத்தரணி. 147

---

C. E. I. / E. C. (PART I) EXAMINATION
MAY 1985

காங்கேசன்துறையில், சீமெந்துத் தொழிற்சாலையின் மிக அனுபவம் வாய்ந்த பொறியியலாளர்களினுல் விரிவுரைகள் நடாத்தப்படவுள்ளது.

**விரிவுரைகள் ஆரம்பம்: 20-10-84**

விபரங்களுக்கு:

**VIKINK INSTITUTE**

குசவாசா, கல்லூரி வீதி, காங்கேசன்துறை (151)

---

**DAY CLASS 2-ம் பிரிவு**

**ஆரம்பம் : 15–10–84 திங்கள்**
MONDAY — FRIDAY

1-00 — 2-00 — நுண்கணிதம்
2-00 — 3-00 — ஒருபுள்ளியில் தாக்கும் விசைகள்

ஆசிரியர் : திரு. கிருஷ்ணு B. Sc.

விபரங்கட்கு :

**New Master Institute**
BMC LANE, — JAFFNA.

---

## அரிய சந்தர்ப்பம்

யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக கம்பியூட்டர் கல்வியை அறிமுகப்படுத்திய நாஷனல் அக்கடமி நிறுவனத்தின் 5-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உடனடி வேலைவாய்ப்பைப் பெறக்கூடிய

1. COMPUTER PROGRAMMING
2. RADIO TELEVISION
3. HOTEL MANAGEMENT

கல்வியை மாணவர்களுக்கு செய்முறைப்பயிற்சியுடன்
**சலுகைக் கட்டணத்தில்**
போதிக்க முன்வந்துள்ளோம்.
விபரங்கட்கு: 18-10-84இற்கு முன்பாக
நேரில் சமூகம் தரவும்.
வகுப்புகள் ஆரம்பம்; 19-10.84

**நாஷனல் அக்கடமி,**
(விவேகானந்தாஅச்சகம்முன்பாக),11,மொம்சாக்கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (155)

---

## வீடு / காணி விற்பனவு

1. யாழ். பழையபூங்காவீதிக்கு அருகாமையிலும், 3-ம் குறுக்குத் தெருவிலும் ஒவ்வொரு புதிய வீடு.
2. மானிப்பாய் கட்டுடை மகாவித்தியாலயத்திற்கு அண்மையில் 4 பரப்பு யாழ் ஸ்ரான்லி வீதியில் சிறீதர் தியேட்டருக்கு அண்மையில் 1 பரப்பு காணித்துண்டுகள்.

**வருடமொன்றுக்கு உங்கள் மூலதனத்திற்கு**

**25% தொடக்கம் 30% வரை**

வட்டி பெற்றுக்கொள்ளுங்கள்.
விபரங்களுக்கு;
JAFFNA PROPERTY TRADES LTD.
**3, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.**
போன்: 23698

---

## LONDON (CEI) ECE

PART—II வகுப்புக்கள்
எமது நிறுவனத்தில் கடந்த வருட ECE
PART Iல் சித்தியடைந்த மாணவர்களுக்காக
**ஆரம்பம் : 14–10–1984-ல்**
ECE PART I 1986 பரீட்சைக்கான வகுப்புக்கள்
**ஆரம்பம் : 21–10–1984-ல்**

தொடர்பு :

**JASE INSTITUTE**

நாகம்மா கட்டிடம் (டில்கா மேல்மாடி)
**404/2, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.**

---

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்

**கதிரிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை**

**மலர்வு: 9-5-1919 உதிர்வு: 13-9-1984**

எமது முன்னேற்றத்துக்காக மெழுகுவர்த்தி போலான எமது தெய்வமே! உமது ஆத்மா பரந்தாமனடி சேரப் பிரார்த்திக்கிறோம்.

எனது மாமனர் நோயுற்ற காலம் தொடக்கம் இறுதிக் கிரியை வரை உதவி புரிந்த கொழும்பு வைத்தியசாலை ''மீள் உயிர்ப்பகுதி'' Dr. வரதராசாவுக்கும், 5-ம் குறுக்குத்தெரு விஜயா ஏஜன்சி உரிமையாளர்களுக்கும், எம்முடன் துக்கத்தில் ஆழ்ந்த அன்பர்களுக்கும் எம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அல்வாய் தெற்கு,
அல்வாய்.

மனைவி, மகள்,
Dr. வேலும்மயிலும்.

(161)

# இலங்கையில் பெருமளவு வெளிநாட்டு உளவுப் படைகள் ஊடுருவல்!



## பிராந்திய அமைதிக்கு அச்சுறுத்தலென இந்திய பிரதமர் கண்டனம்

### பாக். அணுசக்தி பெருக்கம் பற்றியும் கவலை

**புதுடில்லி அக், 12**

**''இலங்கையில் சில வெளி நாடுகளின் உளவு முகவர்படைகள் அண்மைக்காலத்தில் பெருமளவில் ஊடுருவல் செய்துள்ளன. இது இப் பிராந்தியத்தின் அமைதிக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது'' என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி குறிப்பிட்டுள்ளார்**

புதுடில்லியில் நேற்று நடைபெற்ற இராணுவ அதிகாரிகளின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர்இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் ''பாகிஸ்தான் மேற்கொண்டுவரும் அணுஆயுதத்திட்டத்தினால் இந்தியாவினதும், இப்பிராந்தியத்தினதும் பந்தோபஸ்தில் மிகப்பெரியதோர் மாறுதல் ஏற்பட்டுள்ளது பாகிஸ்தான் அணுஆயுத வல்லமை பெறுவதனை அமெரிக்கா வெளிப்படையாக எதிர்த்தபோதிலும் அமெரிக்க விஞ்ஞானிகள் பாகிஸ்தான் அணுவல்லமை பெறுவதனை பல்வேறு ஆயுதங்களைக்கொண்டு நிருபித்தபோதிலும்கூட பாகிஸ்தான் இந்தமுயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டுவருகிறது. எனவே பாகிஸ்தானின் இந்தமுயற்சிக்கு அணுஆயுத வல்லமை கொண்டசில நாடுகளின் உதவி மறைமுகமாக இருந்து வருகிறதுபோல் தெரிகிறது என்றார்.

எமது பிராந்தியத்தில் ஒருவகையான இராணுவயுக்திகளை சிலநாடுகள் கூட்டாக சேர்ந்து மேற்கொண்டு வருகின்றன. இந்தநாடுகளின் நடவடிக்கைகள் இந்தியாவுக்கு எதிரானதாகவே திட்டமிடப்பட்டுள்ளன. இந்தநிலையில் இந்தியாவும்தனது பாதுகாப்புத்துறையை நவீனமயப்படுத்துவதற்கு பாரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இத்தகையதொரு நிலையில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியைப் பாதுகாப்பது தான் நாம்எதிர்நோக்கும் முக்கிய பிரச்னையாகும். நாட்டு மக்கள் பிளவுசக்திகள் மற்றும் தீவிரவாதிகள் ஆகியோருக்கு எதிராக விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும்அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய பாதுகாப்பு அமைச்சர் திரு. எஸ். பி. சவான் ''பாகிஸ்தான் அவசரமாக அணு ஆயுதவல்லமை பெறுவதற்கு முயன்றுகொண்டிருக்கிறது. இது இந்தியாவுக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறது என்றார்.

''இலங்கையில் அண்மையில் நடைபெற்ற சம்பவங்கள் மிகவும்கவலை அளிக்கின்றன. அங்கு தமிழர்கள் தாக்கப்படுவது மிகவும் வேதனைக்குரியதாகும்.

சீனவுடன் இந்தியா கொண்டுள்ள உறவில் எந்தவித மாற்றமுமில்லை'' என்றும் அவர் தெரிவித்தார். (சூ)

## பாகிஸ்தானுக்கு அணு ஆயுத பாதுகாப்பு அளிக்க அமெரிக்கா முயற்சி?

### பாகிஸ்தான் 'நாளேடு' தகவல்

[புதுடில்லி]

''பாகிஸ்தானுக்கு அணு ஆயுத பாதுகாப்பு அளிப்பது என்று அமெரிக்கா உறுதியளித்துள்ளது'' என்று பாகிஸ்தானின் பிரபல நாளேடு ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது.

அமெரிக்க ஜனதிபதி மாளிகையை ஆதாரமாகக்கொண்டு அமெரிக்க பத்திரிகையொன்று வெளியிட்ட தகவலின் அடிப்படையில் பாகிஸ்தான் நாளேடும் இந்த கட்டுரையை வெளியிட்டு இருந்தது.

''பாகிஸ்தான் தனது அணு ஆயுத வல்லமைபெறும் முயற்சியை கைவிடும் பட்சத்தில் அயல்நாடுகளிலிருந்து பாகிஸ்தானுக்கு ஏற்படக்கூடிய எந்த ஆக்கிரமிப்பையும் தடுப்பதற்கு அமெரிக்கா பாகிஸ்தானுக்கு அணுஆயுத பாதுகாப்பு வழங்குவதாக ஜனதிபதி றேகன் றீகன் உறுதியளித்துள்ளார்' என்று இந்த நாளேடு குறிப்பிட்டுள்ளது.

இந்த செய்திகுறித்து இந்திய வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர்கருத்து வெளியிடுகையில் ''இந்த விவகாரம் குறித்து அமெரிக்கா, பாகிஸ்தான் ஆகிய இருநாடுகளிலுமுள்ள இந்திய தூதுவர்கள் அந்தந்த நாடுகளிடம் விளக்கம் கோரும்படி பணிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த செய்தி உண்மையானதா? என்பது குறித்து இந்திய அதிகாரிகள் ஆராய்ந்து வருகிறார்கள். [சூ]

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் வல்லிபுர நாதர்கோவில் வருடாந்த மகோற்சவம்கடந்தமாதம்25ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இம்மாதம் 3ம் திகதி தேர்த்திருவிழாவுடன் 4ம்,5ம், திகதிகளில் தீர்த்தத் திருவிழா பூங்காவனத் திருவிழா என்பன நடைபெற்று 6ம்திகதி ஆஞ்சனேயர் பொங்கல் விழாவும் சிறப்பாகநடைபெற்றன.

## லிபியா அணுசக்தி வல்லமை பெறுவதற்கு முயற்சி

ரிப்போலி அக் 12

லிபிய அணுச்சக்தி வல்லமை பெறுவதற்கு பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

மேற்கு ஐரோப்பியநாடான பெல்ஜியத்தின் உதவியுடன் லிபியா இந்த முயற்சியில் தற்போது தீவிரமாக இறங்கியுள்ளதாக அமெரிக்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

லிபியாவுக்கு அணுசக்தி உதவிகளை வழங்குவது என்ற பெல்ஜியத்தின் முடிவு குறித்து அமெரிக்காவும், பிரிட்டனும் பலத்த ஆட்சேபம் தெரிவித்துள்ளன.

லிபியா வேறுபல நாடுகளிடமிருந்தும் அணுசக்தி உதவிகளைப் பெறுவதற்கு முயற்சி செய்கிறது என்றும் அமெரிக்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சூ)

## ஜோர்டான் மேற்குக் கரையில் பாலஸ்தீனியருக்கு தனிநாடு

### எகிப்து—ஜோர்டான் தலைவர்கள் யோசனை

(அம்மான்)

இஸ்ரேலினால் கைப்பற்றப்பட்ட ஜோர்டானின் மேற்கு கரையோரப்பகுதியில் பாலஸ்தீனியருக்கு தனிநாடு ஒன்று ஏற்படுத்துவது குறித்து எகிப்தும் ஜோர்டானும் பேச்சுக்களை நடத்தியுள்ளதாக தெரிகிறது.

அண்மையில் ஜோர்டானுக்கு விஜயம் செய்த எகிப்திய ஜனதிபதி கொஸ்னி முபாரக்கும் ஜோர்டான் மன்னர் ஹுசேனும் நடத்திய தனிப்பட்ட பேச்சுவார்த்தைகளின் போது இந்த யோசனை தெரிவிக்கப்பட்டதாக கூறப்படுகிறது,

இந்த இருநாடுகளும் இஸ்ரேலை ஒரு நாடாக அங்கீகரிப்பதுடன் பாலஸ்தீனியருக்கு தனிநாடு ஒன்று தேவை என்பதனையும் உணர்ந்து இஸ்ரேலினால்கைப்பற்றபட்டு தற்போது இஸ்ரேல் வசமுள்ள ஜோர்டானின் மேற்கு கரையோரங்களில் இருந்து இஸ்ரேலை வெளியேறச் செய்து அப்பகுயிதில் பாலஸ்தீனியருக்கு தனிநாடு ஒன்று அமைக்கலாம் என்பது இந்த இரு தலைவர்களினதும் கருத்தாகும்.

இஸ்ரேல் புதிதாக அமைந்திருக்கும் தலைநகரும் உலக புனித தலமுமான ஜெரூசலம் இந்த மேற்கு கரையில் தான் உள்ளது. இதனால் இஸ்ரேல் இப்பிராந்தியத்திலிருந்து வெளியேறி பாலஸ்தீன அரசு ஒன்று அமைக்க சம்மதம் தெரிவிக்குமா என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

இதேவேளை அம்மானில் இருந்து தாய்நாடு திரும்பிய எகிப்திய ஜனதிபதி முபாரக் எகிப்தும ஜோர்டானும் ஒன்ருக இணைக்கப்படும என்று வெளியான செய்திகளை மறுத்துள்ளார் பாலஸ்தீனியப் பிரச்னையில் யாசீர் அரபாத்தின் தலைமையில் இயக்கத்தை ஒற்றுமைப்படுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார். (சூ)


## பற்றீஷியன்இன்ஸ்ரிரியூட்ஸ்

கீழ் குறிப்பிட்டவைக்கு
செய்முறை நெறிமுறை உட்பட்ட
எமது அடுத்த வகுப்புகள் எதிர்வரும்
சனிக்கிழமை 20-10-1984-ல்
ஆரம்பமாகும்

| | |
|---|---|
| ★ மோட்டார் மெக்கானிஸம் (MOTOR MECHANISM)<br>★ எலக்ரிக்கல் என்ஜினியரிங் வேர்க்ஸ் டிப்புளோமா (ELECTRICAL ENGINEERING WORKS DIPLOMA)<br>★ படம்வரைதல்-பில்டர்ஸ் குவாண்ரிரிஸ் உட்பட (DRAFTS ANSHIP — INCLUSIVE OF BUILDERS QUANTITIES)<br>★ எலெக்ரோனிக்ஸ் (ELECTRONICS) | 6 மாதகால பகுதி நேர வகுப்பு |
| ★ கடைச்சல் இயந்திர இயக்குதல் (LATHE OPERATION)<br>★ மின் வெல்டிங் (ARC WELDING)<br>★ றெவ்றிஜறேஷன் (REFRIGERATION)<br>★ தொழிற்சாலைகள் மின்இணைப்பு (FACTORY WIRING) | 3 மாத கால பகுதி நேர வகுப்பு |
| ★ வீட்டு மின் இணைப்பு (HOUSE WIRING)<br>★ நீர் குழாய் இணைப்பு (PLUMBING) | 1 மாதகால பகுதி வகுப்பு |

இவ் நிறுவனத்தில் விற்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தில் மட்டும் வியாழன் 18-10-1984 பி.ப. 4-00 மணிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பப் பத்திரமும் மற்றும் விபரங்களும் கந்தோரில் நேரில் வந்து மு.ப. 9-30 மணி தொடக்கம் பி.ப, 4-00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொரு வகுப்பிலும் **15** பேர் மாத்திரம் விண்ணப்பிக்கும் கிரமப்படி சேர்க்கப்படுவர் ஆகவே உடன் விண்ணப்பித்து ஏமாற்றத்தைத் தடுக்கவும்.

பதிவாளர்,
**பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்**
59, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.



கனடா செல்வதற்கான சகல ஒழுங்குகளுக்கும்,
BERLIN செல்ல விமானச்சீட்டுக்களுக்கும்
உடனடியாகப் பதிவு செய்வதற்கும்,

**AIR-TRANSIT**

ஏயார் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99-2/56 B கபூர் பில்டிங்,
2-வது மாடி, கொழும்பு-1.
போன்: 549365

538 (290), ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689

### மணிவாக்கு

நம்மைத் தெரிந்து கொள்ளாமல் வெளிஉலகத்தைத் தெரிந்துகொள்ள முடியாது. தெரிந்து கொண்ட பிறகோ வெளி உலகத்தில் தெரிந்து கொள்ள ஒன்றும் கிடையாது.

— ரமண மகரிஷி

## நமது நோக்கு

# நைஜீரியாவின் ராணுவ ஆட்சி

உலகில் கட்டுக்கடங்காத சமூகம் நைஜீரியா என்ற அபகீர்த்தியை ஒழித்தே ஆகவேண்டுமென்பது இவ்வருடம் ஆரம்பத்தில் அதிகாரத்தை கைப்பற்றிய புதிய ராணுவ ஆட்சியின்முதற்பணியாக இருக்கின்றது

ஆட்சித்தலைவர் ராணுவ தளபதி புகாரியின் கொள்கை: இந்த நாடு ஒன்றே நம் சொந்த நாடு இதனை சமூக விரோதிகள் அழித்துவிட இடமளிக்கலாகாது.

புதுமைக்கு வெளுக்கும் ஒழுங்கு பற்றி ஒருபழமொழிஉண்டு. அதற்கேற்ப இதுகாறும் ஒழுங்கீனத்துக்கெதிராக நடந்துவரும் தண்டனைகள் மிகத் தீவிரமாக இருந்தபோதும் மக்கள் அதனை வரவேற்றிருக்கின்றனர்.

குறிப்பாக பத்திரிகையாளர் ஆட்சிக்கெதிராகப் பொய்ப்பிரசாரம் செய்தால்-அவமானத்திற்கு இடமளிக்கும் தகவல் என்றாலும் - ஒருவருட சிறை அதற்குத் தண்டனையாகும்.

ஒழுங்கும், நேர்மையும் கட்டுப்பாடும் மருந்துக்கும் கிடைத்திராத இந்த நாட்டில் மக்கள் காணும் மாற்றம் ஒரு அமைதியான புரட்சியால் ஏற்பட்டதென்று நினைக்குமளவிற்கு சட்டம் தொழிற்படுகின்றது.

எந்த ஸ்தாபனத்துக்குச் சென்றாலும் கியூவரிசை மிக இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. சினிமாவிற்கு போவோர் கூட முன்னேற்பாட்டால் பிரவேசச்சீட்டு பெறமுடியாது. சாரதிகள் தாங்கள் நினைத்த வண்ணம் வாகனம் செலுத்தும் வழக்கம் முடிவடைந்திருக்கிறது.

''செய்யுந் தொழிலே தெய்வம்'' என்ற கோட்பாட்டுக்கு புதுமெருகு ஊட்டப்பட்டிருக்கிறது ''வாழ்வுக்குசுவையளிக்கும் இன்பங்கள் எதுவும் இலவசமாகக் கிடைப்பதில்லை'' இதுபோன்றவிளம்பரப் பலகைகள் இந்நாட்டின் சினிமாப் படங்களின் விளம்பரம்போல காட்சியளிக்கின்றன.

''அன்றாடு தொழில் செய்தவனே தனது உணவுக்கு உரித்தாவான்; அப்படிச் செய்தாயா?'' என்றகேள்வி நாடெங்கும் பகிரங்கமாகக் கேட்கப்படுகிறது.

இவையெல்லாம் வெறும் வெருட்டல்ல, தண்டனைகள் ஒழுங்காக நிறைவேற்றப்படுகின்றன. ராணுவ ஆட்சியில் வேறென்ன நடக்குமென்பதை விளக்க வேண்டுமா?

எங்கள் நாட்டுக்கு இவையெல்லாம் புதினமாக இருந்தாலும் ஒருசிறு அனுபவம் எங்களுக்கும் இல்லாமலில்லை. ஊரடங்குச் சட்டம் அமுலாகும் நேரத்தை எங்கள் மணிக்கூடா நிச்சயிக்கிறது. நேரம் தவறி படலை பூட்டப்போனவர் படலையிலே சமாதியானதும், ராணுவம் தானே தவறென்று உணர்ந்ததும் ''வெரி(றி) சொறி'' என்றதும் நைஜீரியாவில் நாடும் நடப்பும் எவ்வாறிருக்குமென உணர்வதற்கு ஒரு விளக்கமல்லவா?

ஊழல், மோசடி, கொள்ளை உயிருக்கு பாதுகாப்பின்மை தாண்டவமாடும்போது பொதுமக்களை இவற்றிலிருந்து தப்பவைக்க நல்லாட்சி வேண்டுமென்று தவங்கிடப்பது எங்கள் மக்களுக்குத் தெரியாவிட்டால் வேறு யாருக்குத் தெரியமுடியும்?

இத்தகைய கடும்பிடியான கட்டுப்பாடான வாழ்வுக்கு இன்றைய நைஜீரிய ஆட்சி தன்னை அர்ப்பணித்துள்ளது.

மக்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளின் ஆட்சி அல்ல; ஆனால் இதுகாறும் எவ்வாறு இம்சைப்பட்டனர்; நாட்டின் செல்வம் எவ்வாறு விரயப்பட்டது என்பதைநன்கறிந்த ஆட்சி.

எனவே ஒழுங்குப் பசி கொண்ட மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம்போல் தோற்றமளிக்கிறது. களவில் மோசடியில் அகப்பட்ட எவரும் தப்புவதற்கு இந்த ஆட்சி இடமளிக்காதென்ற நம்பிக்கை உறுதியாகின்றது.

இவ்வளவெல்லாம் சொல்லப்பட்டபோதும் செயலில் நிறைவேற்றப்பட்டபோதும் நாட்டின் அபிவிருத்திக்கு தேவையான நிதி- நிதிபற்றுக்குறை-நாட்டின் பெரும்பிரச்னை; இதனைத் தீர்க்க இன்றைய ஆட்சி என்ன செய்கிறது?

குற்றத்திலும் பார்க்க தண்டனை பெரிதாகின்றது; அது ஆட்சியின் ஒருகுறை; பெருங்குறை யென்னவென்றால் பட்டினிக்கு வழி காணும் பணி பேசாமல் கிடக்கிறதே.

நெடுங்காலம் நிலவிவரும் பொருளாதார வீழ்ச்சிக்கு விமோசனம் காணும் திறமையுற்ற 'சிவில்'ஆட்சி விரைவில் உருவாகவேண்டும்.

# விழியற்றோருக்கு வழிகாட்டும் வெள்ளைப்பிரம்பு!

ஒவ்வோர் ஆண்டும் ஐப்பசித் திங்கள் 15-ஆம் நாள் சர்வதேச வெள்ளைப்பிரம்புப் பாதுகாப்புத் தினமாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. 1960-ஆம் ஆண்டு இலங்கையில் நடந்தேறிய சர்வவேச விழிப்புலனற்றோர் சம்மேளன மகாநாட்டில் இப்பிரகடனம் முதன்முதல் பிறப்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து சர்வதே, தேசிய, பிராந்திய மட்டங்களில் இத்தினம் பிரபல்லியப் படுத்தப்பட்டு வருகிறது. இதற்கொப்ப 1978-ஆம் ஆண்டிலிருந்துஇலங்கைவாழ் தமிழ் பேசும் பார்வையற்றோரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பான யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் இலங்கையின் வடபுலத்தின் பல்வேறு பகுதிகளில் அவ்வப்பிராந்திய லயன்ஸ் கழகங்களின் ஆதரவுடன் இத்தினத்தைக் கொண்டாடி வருகின்றது. இவ்வருடக் கொண்டாட்டம் கரைச்சி லயன்ஸ்கழக ஆதரவுடன் கிளிநொச்சியில் (13-10-1984) இன்று நிகழ்வு பெறுகிறது. உலகெங்கணும் சர்வதேச வெள்ளைப்பிரம்புப் பாதுகாப்புத்தினம் கொண்டாடப்படும்

## வெ.சுப்பிரமணியம்

இவ்வேளையில் இத்தினத்தின் முக்கியத்துவம், வெள்ளைப் பிரம்பின் தத்துவம் என்பன பற்றி எம்மவருக்கு அறிவுறுத்துவது சாலவும் பொருத்தமானதே.

### வழிகாட்டும் பிரம்பு

வெள்ளைப்பிரம்பு என்பது பிளாஸ்டிக் அல்லது இரும்பு போன்றவற்றினால் செய்யப்பட்ட வெள்ளை நிறத்திலான ஓர் ஊன்றுகோலாகும். அநேக வெள்ளைப்பிரம்புகள் அவை உபயோகிக்கப்படாத சந்தர்ப்பங்களில் வைத்திருப்பதற்கு வசதியாக நான்கு துண்டுகளாக மடிக்கக்கூடியவகையில் செய்யப்பட்டுள்ளன, இப்பிரம்பு சர்வதேசரீதியாக, சட்டரீதியாகப் பார்வைக் குறைபாடுடையோர்க்கு வழங்கப்பட்டுள்ள ஓர் அடையாளச் சின்னமாகும். எனவே பாதையிலே வெள்ளைப்பிரம்பினைத் தாங்கி ஒருவர் வரும்போது அவர் ஒரு பார்வையற்றவர் அல்லது பார்வையில் குறைபாடுடையவர் என்பதனைச் சக பாதசாரிகள் இனங்கண்டு கொள்கின்றனர். பிற பார்வையுள்ள வழிகாட்டிகளின் உதவியின்றிச் சுயமாக நடமாடத்தக்க வகையில் ஒரு வெள்ளைப் பிரம்பு பார்வையற்றவரைச் சுயாதீனமாக்குகிறது. இதன் காரணமாக அது விழிப்புலனற்றோருக்குக் கண்களுக்குச் சமமானது என்றும், பார்வையுள்ள வழிகாட்டிக்குச் சமமானது என்றும் வருணிக்கப் படுகிறது, அத்தோடுகூடப் பார்வையற்றோருக்குப் பாதை

[யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் கரைச்சி லயன்ஸ் கழக ஆதரவுடன் கிளிநொச்சியில் கொண்டாடும் 'சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினவிழா 1984'கொண்டாட்டத்தை முன்னிட்டுப் பிரசுரிக்கப்படும் கட்டுரை.]

களிலே தேவைப்படக்கூடிய பொருத்தமான உதவிகளைச் செய்வதற்குப் பொதுமக்களை இப்பிரம்பு வரவேற்கிறது.

### கொண்டாட்டத்தின் நோக்கம்

எத்துணை பிரச்சாரங்கள் செய்யப்பட்டு வந்துள்ள போதிலும் எம்மவர்களில் பலர் மேற்கூறப்பட்ட வெள்ளைப்பிரம்பின் தத்துவங்களை இன்னமும் அறியாதவர்களாக இருக்கிறார்கள் என்பதும்,அறிந்தவர்கள் அதற்குரிய மதித்துணர்வைக் கொடுக்காதிருக்கிறார்கள் என்பதும் வருந்துதற்குரியன. இத்தகைய நிலையினை நேர்சீர் செய்வதற்கும், வெகுசன மட்டத்தில் வெள்ளைப்பிரம்பினைப் பிரபல்லியப் படுத்துவதன் மூலம் பார்வையற்றோருக்குப் பாதைகளிலே பாதுகாப்பினை உறுதிப்படுத்திக்கொள்வதற்காகவுமே சர்வதேச வெள்ளைப்பிரம்புப் பாதுகாப்புத் தினங்கள் கொண்டாடப்படுகின்றன.

வெள்ளைப் பிரம்பிற்குரிய சட்ட அங்கீகாரத்தைச்சுட்டிக் காட்டிப் பார்வையற்றோருக்கு பாதுகாப்பை கோருவதைவிட அது பாதையிலே எதிர் நோக்கும் ஆபத்துக்களையும், எதிர் பார்க்கும் உதவிகளையும் சுட்டிக்காட்டி மக்களின் மனிதாபிமானத்தைக் கோருவதே பார்வையற்றோரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் என்பதனை விழிப்புலனற்றவர்கள் உணர்ந்தே இருக்கின்றனர். எனவே சட்டத்திற்காக அன்றி ஒவ்வொரு குடிமகனும் தனது அடி மனதிலிருந்து எழும் மனிதாபிமான சிந்தனையின் அடிப்படையில் வெள்ளைப் பிரம்பிற்கு அங்கீகாரம் அழிக்க வேண்டுமென கோரப்படுறது. இவ் அங்கீரம் பார்வையற்றோருக்குப் பாதையிலே தேவைப்படுகின்ற உதவிகளைச் செய்து கொடுப்பதை உள்ளடக்கும். உதாரணமாக சனசந்தடிகள் மிகுந்த பாதைகளிலே தடங்கலின்றி நடந்துசெல்ல,போக்குவரத்து மிகுந்த வீதிகளைக் கடக்க குறிப்பிட்ட ஓரிடத்தையோ வீதியையோ கண்டுகொள்ள பார்வையற்றோருக்கு பொது மக்கள் உதவி நல்கலாம் அது போலவே பாதையில் நிறுத்தப்பட்டிருக்கும் வாகனங்கள் அல்லது அது போன்ற யாதுமொரு தடையில் மோதிக் கொள்ளல், பள்ளங்கள் வடிகால்கள் போன்றவற்றில் விழுந்துவிடல் போன்ற ஆபத்துக்களின் போது பாதசாரிகள் விரைந்து சென்று அவரது நிலையை அவருக்கு உணர்த்தலாம். சைக்கிலோட்டிகளும் சாரதிகளும் வெள்ளைப்பிரம்பைத் தாங்கியவருக்கு தமது வாகனங்களால் ஆபத்து ஏற்படாவண்ணம் விசேட கவனம் செலுத்தல் அவர்களது தலையாய கடமையாகும்.

# நன்மை தீமை பார்த்து நீதிவழங்கும் சனிபகவான்

இரக கூட்டங்களுக்குள் கருநீலவர்ணத்துடன் அதிக உயரத்தில் காணப்படுவது சனிக்கிரகம்.

சனீஸ்வரன் சூரியபகவானுக்கும் சாயாதேவிக்கும் பிறந்தவன். பிறந்தசேதிகேட்டு சூரியபகவான் தேர்ப்பாகன் சுதனுடன் தன்மகனைப் பார்க்க வந்தபோது, அவனை அந்தப் பிள்ளை பார்த்தகணமே குஸ்டரோகம் பிடித்துக் கொண்டது. தேர்ப்பாகன் சுதனுக்கு கால் முடமாகி விட்டது. இதைப்பொறுக்க முடியாத சூரியன் மகனைத்தூக்கி வீசி எறிந்துவிட்டானும். பெற்ற தகப்பனைக்கூட, சனி விட்டுவைக்கவில்லை. எவராயிருந்தாலும் தன்கடமை புரிவதில் சனிக்கு நிகரான எந்தக் கிரகமும் இல்லை. இதனால் தான் சூரியனுக்கும் சனிக்கும் அதாவது தகப்பனுக்கும் மகனுக்கும் பிறவிப்பகை ஏற்பட்டது. சூரியதசையில் சனிபுத்தியில்; சனி திசையில் சூரிய ஒவ்வொருவரும் நிச்சயம் பாவம் செய்த ஆத்மாக்கள். புண்ணிய ஆத்மா பிறவி எடுப்பதில்லையென்பது இந்து தர்மம். பாவம்செய்த ஆத்மா தன்னை சுத்திசெய்யவே பிறவி எடுக்கின்றது. அப்படிப்பிறந்த ஆத்மா செய்த நல்வினைகள் தீவினைகள் அதாவது ஏற்கனவே கொண்டு வந்த பாவ மூட்டை; அப்புறம் பிறந்த பின்பு இப்பிறவியிலே ஆணவத்தினால், கர்வத்தினால், மாயையினால், செய்யும் மிகுதிப் பாவமெல்லாம், எங்கு போய்விடும். நாம் தப்பமுடியாது. யார்கண்ணில் மண்ணைத்தூவினாலும் சனீஸ்வரன் கண்ணில் மண்ணைத்தூவமுடியாது. எல்லாக் கிரகங்களும் நன்மை தீமையையே செய்கின்றன. இருந்தும் சனீஸ்வரன் ஒருவனே நன்மை தீமையைச் சீர்தூக்கிப்பார்த்து நீதி வழங்கின்றார், இவர் வழங்கும் நீதி சிலருக்கு வேதனையையும், சோதனையையும் கொடுக்கிறது.

— ஐயா சச்சிதானந்தன்

புத்தியில் பலனை அனுபவிப்பவர்களுக்கு நன்குதெரியும்.

சனி ஒரு சிவபக்தன் கடும் தவ வலிமையினாலேயே சனீஸ்வரன் என்ற பெயரை இவன் சிவனிடம் இருந்து பெற்றான். கிரகங்களுள் ஈஸ்வரப் பட்டமெடுத்தது சனியொன்றுதான்.

சனீஸ்வரன் பிராத்துவ பூர்வபுண்ணியத்திற்கு அதிபதியாவார். ஒவ்வொருவர் செய்துகொண்ட பாவபுண்ணியத்திற்கு ஏற்ப வாழ்க்கைச் சமாளிக்கும் மகான் இவர். மனிதனாய் பிறந்த

சனீஸ்வரன் விஸ்வகர்மாவின் மகளைத் திருமணம் செய்து அவளைப்புறக்கணித்து அவளோடு இல்லறவாழ்வு நடந்ததாலே அவள்அவனைச் சபித்தாள் நீ பார்க்கும் பொருளெல்லாம் கருகிப் போக வேண்டும் என்று உடனே இதற்கு சனீஸ்வரன் மன்னிப்பு வழங்க வேண்டும் என்று வேண்ட நீ அமைந்திருக்கும் ஸ்தானத்தைக் கொண்டும், சிவவழிபாட்டாலும், சூரியவழிபாட்டாலும் விமோசனம் பெறலாமென்று

(5-ம் பக்கம் பார்க்க)

## காரைநகரில் நடந்த காந்தி 115 வது பிறந்த தினவிழா

(பண்டத்தரிப்பு)

காரைநகர் சர்வோதய இயக்கத்தின் ஆதரவில் காந்தியடிகளின் 115 ஆவது பிறந்ததின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. காரைநகர் சைவ மகாசபை மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய அதிபர் திரு. தேவதாசன் தலைமை வகித்தார். திரு. தேவதாசன் தமது உரையில் மகாத்மா காந்தியடிகள் ஒரு அவதார புருசர் என்றும் இன்றைய இளம் சந்ததியினர் அவரது வாழ்க்கை முறையைப்பற்றியும், அவரது உயரிய இலட்சியங்கள்பற்றியும் நன்கு அறிந்திருக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார். இவ்விழாவில் டாக்டர் ஆ. தர்மலிங்கம் ''காந்தியும் மனுவும்'' என்னும் பொருள்பற்றியும், செல்வி நல்லபிள்ளை நாகமுத்து ''மாணவர்களுக்கு காந்தியடிகளின் உபதேசம்'' என்னும் பொருள்பற்றியும், திரு. சு. நகுலேஸ்வரன் ''காந்திஜியும் சோவியத் ஒன்றியமும்'' என்னும் பொருள்பற்றியும் உரையாற்றினார்கள்.

## மதியுரைக்குழு

(பண்டத்தரிப்பு)

காரைநகர் தபால் அலுவலகத்தில் மதியுரைக் குழுவொன்று அண்மையில் தபால்அதிபர் திரு. பி. அரியரத்தினம் தலைமையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

# "அரசு ஊர்வலம் நடத்தலாம்

## ஆனல் எதிர்க்கட்சிகளுக்குத் தடை!"

### பாராளுமன்றத்தில் கலவான எம். பி.

(கொழும்பு)

''அரசாங்கம் தனதுவிருப்பம் போல் ஊர்வலங்களை நடத்த லாம். ஆனல் எதிர்க்கட்சியி னர் ஊர்வலத்தை நடத்த தடைவிதிக்கிறது.''

இவ்வாறு கலவான எம். பி. திரு. சரத் முத்தெட்டு வேகம பாராளுமன்றத்தில் கூறினர்

பொலிஸ் திருத்தச்சட்டமூல விவாதத்தில் பேசிய திரு. சரத் மேலும் கூறியதாவது:

ஊர்வலம் ஒன்றை நடத்து வதற்கு அந்த ஊர்வலம் ஆரம்பமாவதற்கு 6 மணித்தி யாலத்திற்கு முன்னர் எழுத்து மூலம் பொலிசாரிடம் அனு மதி கோரவேண்டும் என்ற இந்த திருத்தச் சட்ட மூலம் அரசின் சர்வாதிகார நடவடிக் கைகளில் ஒன்றாகும்.

''மின்னேரியா இடைத்தேர் தல் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டபோது அரசாங்க தரப்பினர் துப்பாக்கிகளுடன் நடமாட அனுமதிக்கப்பட்ட அதேவேளையில் எதிர்க்கட்சி யைச் சேர்ந்த படப்பிடிப்பா ளர் ஒருவரின் கமராகூட அடி த்துஉடைக்கப்பட்டது. அந்த படப்பிடிப்பாளர் இதுகுறித்து பொலிஸில் முறையிடச் சென்ற போதும் அந்த முறைப்பாட் டைப் பொலிசார் பதிந்து கொள்ள மறுத்துவிட்டனர்.

''அரசாங்கம் ஏன் ஊர்வலத் தைக் கண்டு பயப்படுகின் றதோ தெரியவில்லை.

மனித உரிமைகளை மீறிய தாக உயர்நீதிமன்றம் தீர்ப் பளித்த பொலிஸ் அதிகாரி களுக்கு அரசு பாராட்டும் பதவி உயர்வும் வழங்கியுள் ளது. இலங்கைச் சரித்திரத் தில் இது முதல்தடவையாக இடம்பெற்ற சம்பவம்.''

**பயங்கரவாதிகள் வாழும் வடபகுதிக்கே இது பொருந்தும்**


கொத்மலை எம். பி. திரு ஆனந்த தசநாயக்கா பேசுகை யில் கூறியதாவது,

''ஊர்வலங்களைத் தடுத்து நிறுத்த திருத்தச் சட்ட மூலம் அரசுக்குத் தேவையில்லை. ஊர் வலக்காரர்களை அடித்தோ-உதைத்தோ மிதித்தோ பல ஊர்வலங்களை நீங்கள் தடுத்து நிறுத்தியுள்ளீர்கள். பொலிசா ரின் இந்த உத்திகளுக்குப் பயந்து எதிர்காலத்தில் எவரும் ஊர்வலங்களை நடத்தமாட் டார்கள்; இத்திருத்தமும் அவ சியமில்லை.

பயங்கரவாதிகள் வாழும் வடபகுதிக்கே இத்திருத்த சட்ட மூலம் பொருத்தமாகும் ஏனைய பகுதிகளுக்கு இது தேவையில்லை.

**பாயும் குரங்குகளுக்கு ஏணி....!**

பாய்ந்து செல்லும் குரங்கு களுக்கு ஏணி வைப்பது போன்றே பொலிசாருக்கு உத வும் பொருட்டு இத்திருத்தச் சட்ட மூலம் கொண்டுவரப் பட்டுள்ளது.''



## 'மைனர்' நவரத்தினம்

யாழ் மாநகர முன்னுள் மேயர் எஸ்.எஸ்.நவரத்தினம் மக்களின் தேவைகளை உணர்ந்து அதனைநிறைவேற்று வதில் திறமை வாய்ந்தவராக வும் தான் நினைத்ததை ஈடேற் றுவதில் வல்லவராகவும் விளங்கியதன் மூலம் 'மைனர்' என பொதுமக்க ளால் அழைக்கப்பட்டார்.

இவர் 1956-ல் யாழ் மாந கர முதல்வராகத் தெரிவுசெய் யப்பட்டார். இவர் தனது பத விக்காலத்திலேயே யாழ் மாந ரத்துக்கென ஆயுர்வேத வைத் திய நிலையமொன்றை ஆரம் பித்துவைத்தார்.குருநகர் மீன வர்களுக்கென வீடமைப்புத் திட்டமொன்றையும் ஏற்படுத் தினர்.யாழ் மாநகர குடிநீர் விநியோகத் திட்டத்தையும் முதன் முதலாக ஆரம்பித்து வைத்தார். இவர் முதல்வராக இருந்த காலத்தில் யாழ் பொதுசன நூலக கட்டடநிதிக் காக ஆசியா பவுண்டேசன் ஸ்தாபனத்திடமிருந்து மூல நிதியைப்பெற்று கட்டடவேலை களை தனது பதவிக் காலத்தி லேயே பூர்த்தி செய்தார்.

இவர் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியிலும் ஓர் முக் கிய உறுப்பினராக விளங்கி, அக் கட்சியின் வளர்ச்சிக்காக அயராது உழைத்த பெருந் தகையாவார்.

யாழ் மாநகர மின்சார அபி விருத்திக்கான நிதியையும் தனது பதவிக்காலத்திலே, இவர் அமைச்சர்களைச்சந்தித்து பெற்றுக் கொடுத்தார்.

ஏழை மக்களின் நல்வாழ் விற்காக தனதுசொந்த பணத் தையும்,செல்வாக்கையும செல விட்டு, இவர் பல திட்டங்களை ஏற்படுத்தினர்.

யாழ் நகரில் வெள்ளிக் கிழமைகளில் இறைச்சிக் கடை கள் பூட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கையைத் தனது பதவிக் காலத்திலே வலி யுறுத்தி அதனை முதல்முத லாக அமுல் படுத்தியவர் இவரே.

இவர் தனது பதவிக்காலத் திலே பாரபட்சமின்றி சகல வட்டார மக்களுக்கும் சேவை யாற்றினர். இத்தகைய பெருந் தகையின் மறைவு தமிழ் மக்க ளுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அன்னரின் அந்தி யேட்டிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை கீரிமலையில் நடைபெறும். அன்னரின் ஆத்மா சாந்தியடைவதாக.

ஓர் அன்பர்

# எளிமையாக நடந்த

## பாடசாலை பரிசளிப்பு விழா

(கல்வியங்காடு)

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் நான்கா வது பரிசளிப்பு விழா நாட் டின் இன்றைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு மிகவும் எளிமையான முறையில் நடை பெற்றது. புதிய அதிபராகப் பதவி ஏற்ற திரு. க. சிவபாத சுந்தரம் விழாவிற்குத் தலைமை வகித்தார். ஆரம்ப பிரிவு களுக்கான பரிசில்களை பண்டி தர் திரு. சி. சரவணமுத்துவும் உயர்தர மாணவர்களுக்குரிய பரிசில்களை வித்தியாலயத்தின் முன்னைநாள் அதிபரும் வண்ணை வைத்தீஸ்வர வித் தியாலயத்தின் இப்போதைய அதிபருமான திரு, சி. சிவ சரவணபவனும் வழங்கினர். விழாவில் மாணவிகளின் பண் ணிசைக்கச்சேரியும் இடம் பெற்றது.

## இன்று நடக்கும் மணிவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சு. வித்தி யானந்தனுக்கு, தேசிய இளை ஞர் சேவைகள் மன்ற கோட் டைமுனை இளைஞர் முன்னணி கழகம் நடாத்தும் மணிவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் மட்டக்களப்பு நகரசபை மண்டபத்தில் நடைபெறும். இவ்விழாவில், மாணவர்களுக் கிடையில் நடைபெற்ற கலாச் சாரப் போட்டிகளின் பரிசளிப் பும் நடைபெறும். (க)

## யாருடையது

நுவரேலியா திரு.குமாரு சோமசுந்தரம், வேலணை கிழக்கு திரு.நடேசன் மகேந் திரன், சாவகச்சேரி ஸ்ரேஷன் வீதி திரு.கனகசபை சோம சுந்தரம், பொகவந்தலாவை சிசிசெல்டன் தோட்டம் திரு. இராமையா முனியாண்டி, வேலணை மேற்கு திரு.நல்லை யா கமலநாதன் ஆகியோரின் அடையாள அட்டைகள் கண் டெடுக்கப் பட்டு ஈழநாடு காரி யாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளன இவற்றை ஓர் அன்பர் அனுப்பி வைத்துள் ளார் இவை தவிர, உடுவில் மதற்கை சேர்ந்த திரு.இரா மநாதன் பிறேமச்சந்திரன் என்பவரின் அடையாள அட் டையை திரு.குமாரசாமி கண்டு எடுத்து ஒப்படைத்துள் ளார். உரியவர்கள் அலு வலக நேரத்தில் வந்து பெற் றுக் கொள்ளவும்.

## நன்மை...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பகர்ந்தாள். ஆதலினுல் தான் சனிதோஷம் பெற்றவர் களுச்கு வியாழனைச் சனிபார்த் தால் பாபவிமோசனமுண்டு.

சிறுவர் முதல் வயோதிபர் வரை எப்படியும் ஏதோவிதத் தில் சனீஸ்வரன் ஆட்சிக்கு உட்படுகிறார்கள். சனிதிசை யென்றே, சனிபுத்தி யென்றே சனி அந்தரம்; சனி சித்திரம்; அட்டமத்துச் சனியென்றே; ஏழரைச்சனியென்றே, சனி யின் ஆட்சிக்குட்படுகின்றார் கள் சந்திரன் நின்ற இராசி யிலிருந்து 12 - 1 - 2 ராசி களில் சனிவரும் காலத்தில் ஒவ்வொரு சாதகரும் பெரும் சோதனைகளைச் சந்திக்க வேண்டிவரும். முதல் ஐந்து வருடங்கள் வேதனையும், சோதனையும் தந்துவிட்டு கடைசி இரண்டரைவருடமும் நல்லபலன்களைக் கொடுத்து நல்லறிவு பெறச்செய்து செல் வமும் கொடுத்து சிறப்புச் செய்கின்றார்.

சனிதோஷமுள்ளவர்கள் சனிக்கிழமைகளில் எண் ணெய்முழுக்கு எடுத்தல் அவ சியம். அத்தோடு சனிவிரதம்; சனிப்பிரதோஷவிரதம் பிடிப் பது சனிதோஷநிவாரணங் களில் சிறந்தது. சனிதிசை 19 வருடமும்; ஏழரைச்சனி, அட்டமத்துச்சனி நடை பெறும் காலங்களிலும் விரத மிருந்து, சனி முழுக்கு அனு சரித்துசிவனை மகாவிஷ்ணுவை ஆஞ்சநேயரை, சூரியனை வழி பட்டு வந்தாலும்; வளர் பிறைச்சந்திரனை வழிபட்டுவந் தாலும், கருடதரிசனம் செய் தாலும் பரிகாரமாகும்.

# மகாசிவம் வெளிநாடு பயணம்

[யாழ்ப்பாணம்]

இலங்கைத் தமிழர் ஆசிரி யர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. த மகாசிவம் தொழிற் சங்கக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் பொருட்டு மேற்கு ஜெர்மனிக்குப் பயணமானர். பிரெட்ரிக் ஈபோட் மன்றத் தின் ஆதரவில் ஜெர்மனியில் நடைபெறும் இக்கருத்தரங் கிற்கு இலங்கையைச் சேர்ந்த மேலும் ஏழு தொழிற்சங்கங் களின் பேராளர்களும் இவரு டன் சென்றுள்ளார்கள்.

இருவாரங்கள் நடைபெற விருக்கும் இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளும் திரு. மகா சிவம் கருத்தரங்கினைத் தொட ர்ந்து வேறு சில ஐரோப்பிய நாடுகளுக்குத் தொழிற்சங்க அமைப்புத் தொடர்பான ஆய்வு ஒன்றினை மேற்கொள் வதற்காகப் பயணஞ்செய் வார்.

சர்வதேச சுதந்திர ஆசிரியர் சம்மேளனத்தின் துணைத்தலை வரும், பிரித்தானியப் பாட சாலை ஆசிரியர் சங்கம்/ பெண் ஆசிரியர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளருமாகிய திரு. ரெறிகசே அவர்களைச் சந்திப்பதற்காக இங்கிலாந்து செல்வார்.

## குருநகர்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கம் இராணுவ இணைப்பதிகாரி யுடன் ஆலோசித்து இந்த ஏற் பாட்டைச் செய்துள்ளார்.

இந்த ஏற்பாட்டின்படி பின் வரும் திகதிகளில் குறிப்பிட்ட இடங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும்.

15-10-84 அன்று யாழ்ப்பா ணம், கொக்குவில், மானிப் பாய், உரும்பிராய். 16-10-84 அன்று யாழ்ப்பாணம், அச்சு வேலி, பருத்தித்துறை, சுளி புரம். 17-10-84 அன்று கர வெட்டி, சுன்னுகம், அள வெட்டி, புங்குடுதீவு. 18-10-84 சாவகச்சேரி, தெல் லிப்பழை, வல்வெட்டித்துறை, பண்டத்தரிப்பு. 19-10-84 காங்கேசன்துறை, காரைநகர், ஊர்காவற்றுறை, வட்டுக் கோட்டை.

## மன்னரில் சுவரொட்டிகள்

[மன்னர்]

தலைமன்னர், பேசாலை பகுதி களில் முதற் தடவையாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவரொட்டிகள் காணப்படு கின்றன.

## சத்தியாக்கிரகம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் உதவிஅரசஅதிபர் பிரிவிலுள்ள வேரவளை கிரா மத்தில் பின்தங்கிய சமூகம் ஒன்றின் புகாரின்மீது மேற் படி உதவி அரச அதிபர் 17-ம் திகதி விளக்கமொன்றை நடத்துகின்றார்.

இச்சமூகத்தவர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை நடத்த விருந்த சத்தியாக்கிரகத்தை அரச அதிபரின் மேற்படி நட வடிக்கையையடுத்து ஒத்தி வைத்துள்ளனர்.

## 1-வது பிறந்த நாள் வாழ்த்து



றெசீனு சியாந்தினி அலோசியஸ்

அப்பா, அம்மா, அக்கா சௌதினி, அப் பம்மா, பேபி அன்ரி, மாறி அன்ரி (அபுதாபி) வலன்ரையின் பெரி அப்பா (சவுதி), சின் னப்பப்பா, சீனிபப்பா, மற்றும் உற்றார், உற வினர்கள் வாழ்த்து கின்றார்கள்.

இல. 5,சென். செபஸ்ரியன் வீதி, யாழ்ப்பாணம். 187

# நினைவஞ்சலி

## செ. சிவமோகன்

ஓய்வுபெற்ற கடற்படைச் செய்திகள் பரிமாறும் பிரிவின் மேற்பார்வையாளரும், ஞானம்ஸ் ஸ்ரூடியோ வின் முன்னுள் தொழில் முகாமையாளரும், ஓமான் Alshawi Trading Company கணக்காளருமான திரு. செ. சிவமோகன் செப்டம்பர் 14-9-84ல் காலமானர்.

இவர் நிர்மலாவின் அன்புக் கணவரும், மைதிலி, வேணுகோபால் ஆகியோரின் அருமைத் தந்தையும், துன்னலை திருமதி செ. ஞானம்பிகை காலஞ்சென்ற எஸ். செல்லையா ஆகியோரின் புதல்வரும், கந்த ரோடை காலஞ்சென்ற சட்டத்தரணி வெ செல்வத் துரை J. P. U. M., திருமதி தையல்நாயகி செல்வத் துரை ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற செ. நடராசா, காலஞ்சென்ற செ. தில்லைநாதன், செ.கந்த சாமி (Audit Officer, Colombo), செ. சுப்பிரமணியம் (R. I., D. D. C , Chunnakam), செ. இரத்தினசோதி (Technician, Jaffna Campus), செ. நவரத்தினம் (Staff Technician, Peradenia Campus), செ. அருள் முகவரதன் (Civil Engineer, Oman), செ. இராமகிருஷ் ணன் (Technician, Oman), திருமதிகள் நாகபூஷணி ராஜேந்திரம், செம்மனச்செல்வி சோமதேவன், ஜெய லக்ஷ்மி செல்வரவீந்திரகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி பகீரதி பத்மநாதன், செ.ஷண் முகடாஸ் (Attorney At Law Colombo) செ. செந்தில் வேல் (Fisheries Inspector), திருமதி சாரதா நவரட் னம், திருமதி அம்பிகை உலகநாதன், செ. சிவசக்தி வேல் (Staff Badulla Baratiya Vidyalayam), செ. கதிர்காமசோதி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னரின் அந்தியேட்டிக் கிரியை இன்று கீரிமலை யிலும் நாளை 14-10-84 கந்தரோடையிலும் நடை பெறுகிறது. உற்றார், உறவினர் யாவரும் இவ்வறி வித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மனைவி, மக்கள்.

கந்தரோடை.

195

# மரம் நாட்டி

## வளம் பெருக்க வாரீர்

சமூகத் தொண்டுகள் பலவற்றில் மரம் நாட்டுதலும் ஒன்ருகும். புராதன வரலாற்று நூல்களில் மரம் நாட்டுதலை மன்னர்கள் தங்கள் புனிதமான தலையாய கடமையாகக் கொண்டார்கள் என்பதற்கு சான்றுகள் பலவுள.

மரம் நாட்டுவதால் மழை வளம் பெருகும். மண்வளம் பேணப்படும். இதனுல் பயிர்கள் செழிப்புற்று வளர்ந்து உணவு உற்பத்தி பெருகும், ஊட்டச்சத்துக்கள் பல நிறைந்த பழங்கள் உணவாகக் கிடைக்கும், சமைப்பதற்கு விறகும், வீடு கட்ட தளபாடங்கள் செய்ய பலகையும் பெறலாம், சூழலைத் தூய்மையாக்கவும் சுற்றுப்புறத்தை அழகாக வைத்திருக்கவும் உதவும். மனிதனுக்கு நிழல் தருவதுடன் பறவைகட்கும், விலங்கினங்கட்கும் பாதுகாப்பு இடங்களாகவும் மரங்கள் உள்ளன.

இத்தகைய பயன் பல தருகின்ற மரங்களை நாட்டுவதற்கு நாம் ஒவ்வொருவரும் முன்வரவேண்டும். அன்று எம்மை ஆட்சி செய்த ஒல்லாந்தர் பெருஞ்சாலைகள் தோறும் பாரிய நிழல் மரங்களை நாட்டுவித்தார்கள். இதன் பலனை நாம் இன்றும் கண்ணுரைக் காணக்கூடியதாக உள்ளது. யாழ். அரச செயலகத்திற்கு முன்பாக உள்ள பாரிய மரங்களை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்

தற்பொழுது பருவமழை ஆரம்பித்துவிட்டது. இக்காலம் மரங்களை நாட்டுவதற்கு உகந்த காலமாகும். தரிசு நிலங்கள், பாடசாலைகள், கோயில் வீதிகள், கிறிஸ்தவ தேவாலயங்கள், பள்ளிவாசல்கள், சந்தைகள், சனசமூக நிலையங்கள், வீதியோரங்கள், வைத்தியசாலைகள், அரச திணைக்களங்கள், வீட்டு வளவுகள், மற்றும் பொது ஸ்தாபனங்கள் ஆகிய இடங்களில் மரங்களை நாட்டலாம்.

மரம் நாட்டு விழாவை பாரிய அளவில் மேற்கொள்ளுவதற்கு கமத்தொழில் திணைக்களம், வனபரிபாலனத் திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம், உதவி அரசாங்க அதிபர் காரியாலயம், கிராம முன்னேற்றச் சங்கங்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், மில்க்வைற் போன்ற தனியார் நிறுவனங்கள் உதவி புரியக்கூடிய ஸ்தாபனங்களாகும். இவ் ஸ்தாபனங்கள் மரம் நாட்டவேண்டிய இடங்களைத் தெரிவு செய்து. உரிய காலத்தில் உரிய திணைக்களங்களின் ஒத்துழைப்பைப் பெற்று மரம் நாட்டுதலை மேற்கொள்ள வேண்டும்.

கனிமரம் நாட்ட விரும்புவோர்கள், தரமான பழமரக் கன்றுகளைப் பெற்றுக்கொள்வதற்காக கமத்தொழில் திணைக்களத்தில் யாழ். மாவட்டத்தில் பின்வரும் கமக்காரர்கள் பிரத்தியேக நாற்றுமேடையாளர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களிடம் பெருந்தொகையான மா, பலா, தோடை, எலுமிச்சை, நெல்லி, கொய்யா, மாதுளைபோன்ற பழமரக் கன்றுகள் விற்பனைக்குஉண்டு.

திரு. அருணுசலம் அண்ணுமலை கச்சாய் கொடிகாமம், திரு. அண்ணுமலை அருணுசலம் கச்சாய் கொடிகாமம், திரு. எஸ். முத்துலிங்கம் பொன்னுலை தொல்புரம்.

திரு. ரி. பி. செல்வரத்தினம், பணிக்கர் வளவு, தின்னவேலி, திரு. எஸ். கே. துரைசிங்கம், ரியூலங்கா பாம், இணுவில், சுன்னுகம். திரு கே. சுப்பிரமணியம், 80, சிறீ இராமநாதன் ரோட், திருநெல்வேலி, திரு. எஸ். விக்னேஸ்வரன், சுந்தரபவனம், இணுவில் கிழக்கு சுன்னுகம், திரு. எஸ். முத்துலிங்கம், கே. கே. எஸ். ரோட், கோண்டாவில் மேற்கு, திரு. சபா சுப்பிரமணியம், மருதனுமடம், சுன்னுகம், திரு. பி. விக்னேஸ்வரன், கே. கே. எஸ். ரோட், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில், திரு. எஸ். கேதீஸ்வரன், சுதுமலை வடக்கு, மானிப்பாய், திரு. எஸ். தம்பிராசா, மயிலனி வடக்கு, சுன்னுகம்.

பிறந்ததின விழா, கலியாணம், புதுமனை புகுதல் போன்ற சுபகருமங்கள் செய்யும் போது தவருது வீட்டில் ஒரு தனிமரம் கட்டாயமாக நாட்டவேண்டும். தற்போதைய காலநிலையைப் பயன்படுத்தி, மரங்கள் பல நாட்டி யாழ். மாவட்டத்தை வளமுள்ள சோலைவனமாக்க நாம் ஒவ்வொருவரும் முன்வருவோமாக

— யாழ். உதவி விவசாயப் பணிப்பாளர்.

## ஐயப்ப சுவாமி கோயில்

### புனருத்தாரணம்

(யாழ்ப்பாணம்)

நயினுதிவு மேற்கு அருள்மிகு ஸ்ரீ ஐயப்ப சுவாமி கோயில் புனருத்தாரண வேலைகள் ஆரம்பமாகவிருப்பதாகவும் அதனை நிறைவேற்ற 50 ஆயிரம் ரூபாய் தேவைப் படுவதாகவும் மேற்படி தேவஸ்தான நிர்வாகம் துண்டுப் பிரசுரம் ஒன்றில் தெரிவித்துள்ளது பொது மக்களிடமிருந்து நன்கொடையையும் இக் கோயில் நிர்வாகிகள் எதிர்பார்க்கின்றனர்.

## இளநீர் வழங்கினர்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி புனித அந்தோனியார் தேவாலய முன்றலில் நடைபெற்ற நாலாம் கட்ட உண்ணுவிரத வைபவத்தில் முஸ்லிம் பெரியோர்களும் பிரசன்னமாயிருந்தனர் உண்ணுவிரதிகளுக்காக இவர்கள் இளநீர் ஈத்தங்கனி வழங்கினர்.

உண்ணுவிரதத்தை முடித்து வைத்து ஜனுப் பாஷா தமதுரையில் 'அஹிம்ஸா வழியில் எடுக்கப்படும் எல்லா முயற்சிகளுக்கும் நல்ல முடிவு கிடைத்தே தீரும்' என்று கூறினர்.

## இன்றைய பலன்

மாதம்—புரட்டாதி
திகதி—27 [13-10-1984]
வாரம்—சனி
திதி—திருதியை முற்பகல் 10-43ன் மேல் சதுர்த்தி
நக்ஷத்திரம்— கார்த்திகை பின்இரவு 1-50 வரை

மேடம்:- உறவுமுறைகளில் வெடிப்புஏற்படும் பணவிவகாரத்தின் மூலம் பகைதோன்றலாம் தொழில்துறையில் அதிகம் கவனம் செலுத்தவும்.

இடபம்:- துன்பத்தின் ரேகை நிழலாட்டம் போடும் துணைவரின் உடல்நலம்கெடும் பணமும் பெருமளவில் செலவாகும்.

மிதுனம்:- சிந்தனைஅலைகள் சீறிப்பாயும் எதற்கெடுத்தாலும் ஆத்திரப்படுவீர்கள் சகோதரத்தின் உடல் நிலை பாதிக்கப்படலாம்.

கடகம்:- மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம் கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு தாய்வழி ஆதரவு தாராளமாகக்கிடைக்கும்.

சிங்கம்:- கல்வித்துறையில் நல்லமுன்னேற்றம் காணப்படுகிறது ஆசிரியருக்குப் புகழ்குவியும் சிலருக்குப் புதியவாகனமொன்று கொள்வனவு செய்வதற்கு இடமுண்டு.

கன்னி:- சமூகத்தில் அந்தஸ்து உயர்வதற்கு இடமுண்டு பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமையைத் தேடித்தரும்.

துலாம்:- பணம்பலவழிகளிலும் செவாகும் அந்நியநபர் ஒருவரால் ஏமாற்றமடையக்கூடும் உமது நடவடிக்கைகளை எதிரிவேவுபார்ப்பர்.

விருச்சிகம்:- களஸ்திரவழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர் காதலர்கள் வாழ்வில் தித்திப்பான சம்பவங்கள் நடைபெறும்.

தனுசு:- தொல்லைகள் தலைதூக்கும் தொழில்புரியும்இடத்தில் ஏமாற்றத்துக்கு இடமுண்டு வழக்குவிவகாரங்களில் ஈடுபடாதிருக்கவும்.

மகரம்:- இதயப்படுதாவில் இன்பத்தின் மின்னல் பிதாவழி ஆதரவுதாராளமாகக் கிடைக்கும் தெய்வநம்பிக்கை மேலிடும்.

கும்பம்:- இதமானவாழ்வு இன்சொல் இவற்றுடன் பெரியோர்களின் ஆதரவும் தாராளமாக கிடைக்கும் செய்தொழிலாலும் சிறப்புண்டு.

மீனம்:-இலட்சிய பாதையை நோக்கி இன்றுபயணம் ஆரம்பமாகும்எதிர்பார்த்தபொருள் வரவும் இன்று கிடைக்கலாம்.

திருமலை
வே. ரவீந்திரன்

## நெஞ்சம் மறவாதவர்

காலையில் மலர்ந்த மலர்கள் யாவும் அந்தியானதும் வாடிவிடுவது இயற்கையின் மாருத நியதி. அப்படியேதான் மனித வாழ்வும். ஆனுல் அந்தியாகு முன்னரே மலர் பறித்தெடுக்கப்படுவதை என்னென்று சொல்வது

எல்லோரையும் படைத்த கடவுள் நல்லவர்களை மட்டும் விரைவாகவே தன்னிடம் அழைத்துக்கொள்வது ஏனோ!

'விக்கி அண்ணு' என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்பட்ட நீங்கள் இன்று எம்மையெல்லாம் விக்கி விக்கி அழ வைத்துவிட்டீர்கள். எனினும் உன்சேவையும் நினைவும் எம்மனத்தில் நின்று நிலைக்கும்.

- அன்பர்கள்

## ரூபவாஹினி

மாலை

| | |
|---|---|
| 5-30 | நியூஸ்பைடர் மேன் கார்ட்டூன் சித்திரம் (ஆங்கிலம்) |
| 5-55 | சிங்கள நிகழ்ச்சி |
| 6-25 | 'சேர்ச்ஒவ்த பாஸ்ட்' வரலாற்று ஆராய்ச்சி (ஆங்கிலம்) |
| 6-55 | செய்திகள் (தமிழ்) |
| 7-15 | ஜெமினி மேன் (ஆங்கிலம்) |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-35 | நாடகம் (சிங்களம்) |
| 9-05 | மேற்கத்திய இசை (ஆங்கிலம்) |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 10-00 | 'ஸ்டார்ஸ்கி அன்ட் ஹச்', (ஆங்கிலம்) |
| 10-30 | உலகச் செய்திகள |
| 10-35 | 'ஸ்டார்ஸ்கி அன்ட் ஹச்' தொடர்ச்சி |
| 10-55 | நிகழ்ச்சிகள் முடிவு |

## புகையிலை உற்பத்தியாளர் கூட்டம்

(பண்டத்தரிப்பு)

மாதகல் சிகரெட் புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் 24ஆவது வருடாந்தப்பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் நடைபெறவுள்ளது. சங்கத் தலைவர் திரு. இ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் சங்கத்தின் எதிர்காலம் பற்றி தீர்மானிக்கப் படவுள்ளது.

வெளிநாடு செல்வதற்கு

★ விமான டிக்கட்:
விசேட கட்டணத்தில் லண்டன், சிங்கப்பூர், மலேசியா
SPECIAL FARE TO LONDON, SINGAPORE AND MALAYSIA
ZAMBIA SINGLE FARE RS 15717/-
RETURN RS 31434/-
சம்பியாவுக்கு ஒரு வழி ரூபா 15717/-
இருவழி ரூபா 31434-/

★ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை
(வங்கியின் கட்டணத்தில்) வாரநாட்களில் காலை 8.30 முதல் 4-30 வரை பெற்றுக்கொள்ளலாம்.
BUY YOUR AMERICAN EXPRESS TRAVELLERS CHEQUES ANYTIME BETWEEN 8-30 AND 4-30

★ விமான ஆசனப் பதிவுகள்
மற்றும் உங்கள் சகலபிரயாண தேவைகளுக்கும்

இன்றே நாடுங்கள்

மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 92 போன்: 24154

ஃபோம்

அதிசய சலவை தூள் உங்கள் துணிகளை வெண்மையாகவும் பளபளப்பாகவும் துவைக்கும்

நயமான விலையும் கூட

சாளமாக நுரைக்கும்
நன்ருகக் கரையும
துணிகளின் அழுக்கை விரைவாக நீக்கும்
சிக்கனம் மிக்கது




தயாரிப்பாளர்:
சின்டெட கம்பனி பிரைவேட் லிமிட்டெட
தொழில் நுடபவலலுனா
தெய்கோகு ககோ கமபனி லிமிட்
ஒசாகா, யபபான்
இலை ஸதாபனம்
55, முதலாம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்

UNIQUE COMMUNICATION SERVICE

யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்



நொடிப்பொழுதில் தெளிவான சர்வதேச தொலைபேசி ரெலெக்ஸ் அழைப்புகளுக்கு இன்றே நாடுங்கள் - யுனிக்

24 மணிநேர சேவை

யாழ் நகர அலுவலகம்
28/18 - 11 மகாதமா காந்தி ரேட்.
(சலுசலவுககு அனமையில)
யாழபபாணம்.
ரெலெகஸ - 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891

கொழுமபு நகர அலுவலகம
அவுஸதிரேலியா கட்டிடம
த.பெ 1917, 54 யோர்க வீதி, கொழுமபு 1
ரெலெகஸ.- 21652, 21742 21918 21931, PERIMP CE
தொலபேசி:-22726 547884, 548626, 549065, 549066

**சாந்தி** (யாழ்நகர்)
13-10-84 முதல்
10-30, 2-30, 4-45
William Hurt, Sigourney Weaver
Christopher
EYE WITNESS
Achion- Color

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
சிவாஜி - ஜெயலலிதா
**பட்டிக்காடா பட்டணமா**

முதல்தர 'திகில்' படம்
**றீகல்** (யாழ் நகர்)
10 முதல்- (குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்)
10-30, 2-15, 4-30, 6-30
VISITING HOURS
விறுவிறுப்புடன் கூடிய திகிலூட்டி திடுக்கிட வைக்கும் இப்படத்தை இருதயம் பலவீனமானவர்கள் பார்ப்பதை தவிர்க்கவும்.
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.

**வின்ஸர்** (யாழ்.)
கடைசி இருதினங்கள்
தினசரி 10-30, 2-00, 4-30, 6-30
"BIG BOSS"
15-10-84 முதல்
10-30, 2-30, 6-15
ஜெய்சங்கர் - சாவித்திரி
**ஐக்கம்மா**

**ஹரன்** (யாழ். நகர)
தினசரி 10-30, 2-30
சிவாஜி, லட்சுமி
**தங்கைக்காக**
18 முதல்
10-15, 12-30, 2-15, 4-15, 6-00
Brusce lee
DRAGON STRIKES AGAIN
(Colour)

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00 6-15
எஸ். எஸ் ஆர்.-விஜயகுமாரி
**பூம்புகார்**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30 4-30
THE HOWLING
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00 4-30 6-45
கடைசி இரு தினங்கள்
PARADISE
(Color) strictly for adults)
கண்டிப்பாக 17 வயதுக்குட்பட்டவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்
15-10-84 முதல்
THE FAN

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும்.
ரஜனிகாந்த்-சௌகார்ஜானகி நடித்த
**தீ**
தீபாவளி வெளியீடாக
கே. பாலசந்தரின்
**பூவிலங்கு**


## "தேவையை உணர்ந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள நிறுவனம்"

(சாவகச்சேரி)

''தமிழர்களின் தேவையை உணர்ந்து இந்தத் தொழில் நுட்பக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளில் தொடர்ந்து கல்விகற்க முடியாத சூழ்நிலையில் பல்துறை விற்பன்னர்களை உருவாக்குவதற்கு இப்படியான நுவனங்கள் உதவும்,''

இவ்வாறு சாவகச்சேரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள சிவாகி பல்துறை தொழில்நுட்ப நிறுவனத்தின் திறப்புவிழாவில் உரையாற்றிய சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் திரு. பி. வெற்றிவேலு பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ். பல்தொழில்நுட்ப நிறுவன அதிபர் திரு. எஸ். ராஜேந்திரா தலைமை வகித்தார்.

நிறுவனத்தின் தலைவரான திரு. பி. வெற்றிவேலு மேலும் பேசுகையில், தமிழ் பெற்றோர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும்'' என்றார்.

லயன்ஸ் கழகத்தின் பதில் மாவட்ட ஆளுனரும், சட்டத்தரணியுமான திரு சி அம்பிகைபாலன் பேசுகையில், இந்த நிறுவனத்துக்கு லயன்ஸ் கழகம் தன்னலான உதவிகளைச் செய்யுமென்றார்.

சாவகச்சேரி சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் திரு. எஸ். கே. திரவியநாயகம், சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலய அதிபர் திரு. ஜி. பரமசிங்கம். சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் திரு. கே. பாலசந்திரன் உட்பட மற்றும் பலர் பேசினர்.

மானிப்பாய் தொகுதியில் இந் நிறுவனத்தின்கிளை இயங்குகிறது மற்றும் தொகுதிகளில் இந்நிறுவனத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக இத் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிர்வாக அதிகாரி கே. விஜயகுமார்த்தி கூறினர்.


**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 4-30 7-00
HANDS OF THE RIPPER
(Horror Film Adults only)

**எலக்றிக்கல் வயரிங்—மோட்டார் மெக்கானிஸம்**
**ஆரம்பம் 15-10-1984**
கூடிய செய்முறை பயிற்சியுடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பை பெறக்கூடிய முறையில் பயிற்சிகள் நடாத்தப்படுகின்றன.
**இன்ஸ்ரிரியூட் ஒப் என்ஜினியரிங் ரெக்னொலொஜி**
11 B, மொம்சாக் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம். 127

**விரையுங்கள்!**
பல்கலைக்கழக இறுதி ஆண்டு மாணவர்களுக்கு விசேட சலுகை!
உங்கள் ஆய்வு கட்டுரைகளுக்கான (Binding) ''தட்டெழுத்து, மொழிபெயர்ப்பு, புத்தகமாக்கல் வேலைகள் சிறந்த ஆலோசனை, மேற்பார்வையுடன் செய்து கொடுக்கப்படுகிறது.
தொடர்பு: **"Accounting Service"**
சன்னதி வீதி, அச்சுவேலி.
குறிப்பு: இலவச தட்டெழுத்து பயிற்சி வகுப்புகள் இடம்பெறும். 88


## கேள்விப்பத்திர அறிவித்தல்

கீழ்க்குறிப்பிட்ட பொருட்களுக்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. முடிவுத்திகதி 22-10-84 திங்கட்கிழமை முற்பகல் 12-00 மணிக்கு விண்ணப்பப் பத்திரங்களுக்கும் விபரங்களுக்கும் சங்க வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

### பொருட்கள் விபரம்

| | | |
|---|---|---|
| 1. | தரம்பிரிக்கப்பட்ட வெற்றுச்சாக்குகள் | 2523 |
| 2. | கழிவு சீனி | 50.5கிலோ |
| 3. | சுவீப்பிங் சீனி | 31 கிலோ |

பொதுமுகாமையாளர்.

தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம்,
கைதடி 1984 - 10 - 11 166

வண்ணை

## இளையதம்பி வித்தியாலய மாணவிக்கு முதலிடம்

(கல்வியங்காடு)

நல்லூர் வட்டாரப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினக் கட்டுரைப் போட்டியில் யாழ். வண்ணார் பண்ணை இளையதம்பி வித்தியாலய ஐந்தாம் வகுப்பு மாணவி செல்வி குகப்பிரியா பேராயிரம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். யாழ். மாவட்டப் பாடசாலை தமிழ்த்தினக் கட்டுரைப் போட்டியிலும் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

ஆறும் வகுப்பு மாணவர்களுடனும் போட்டியிட்டு யாழ். மாவட்ட போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றமை பாராட்டக்கூடிய செயல் என நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி சான்றிதழ் வழங்கும் பொழுது இவரைப் பாராட்டினார்.


**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## 1985-ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

01-01-1985 தொடக்கம் 31-12-1 85 வரையிலான காலப்பகுதிக்குள் கீழ்க் குறிப்பிடவைகளுக்கான கேள்விகள் இரு பிரதிகளில் 30-10-84-ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | வியாபாரம் | கடை இல. | சென்ற வருடம் ஏற்றுக்கொள் எப்பட்ட கேள் வித்தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1. | மாட்டிறைச்சிக்கடை | என். எம். எஸ். 3 | 47000-00 | 500-00 | 25-00 |
| 2. | மாட்டிறைச்சிக்கடை | என். எம். எஸ். 4 | 47000-00 | 500-00 | 25-00 |
| 3. | ஆட்டிறைச்சிக்கடை | என். எம். எஸ். 1 | 8150-00 | 500-00 | 25-00 |
| 4. | ஆட்டிறைச்சிக்கடை | என். எம். எஸ். 2 | 7150-00 | 500-00 | 25-00 |
| 5. | காலைக்குத்தகை வண்டி, வான். | காலை | 8285-00 | 250-00 | 25-00 |

மேற்படி வைப்புப் பணமும், கேள்விப்படிவக் கட்டணங்களும் செலுத்தப்படவேண்டும் பேரில் 29-10-84-ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை வழங்கப்படும் படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப்படிவக் கட்டணங்கள் திருப்பித்தரப்படமாட்டா. சித்திரமான கேள்விக்காரர்கள் உடன்படிக்கைகளைக் கைச்சாத்திடும் கேள்வி வைப்புப் பணம் திருப்பித் தரப்படும். கேள்வி வைப்புப்பணமும், படிவக் கட்டணமும் ரொக்கமாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.


மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

த. நவரத்தினராசா
தலைவருக்காக,
நகராட்சிமன்றம், சாவகச்சேரி.

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி, 09-10 1984. 167

## யாருடையது

சண்டிலிப்பாய் கல்வளையைச் சேர்ந்த திரு. குலதுங்கம் அரசகுலசிங்கத்தின் அடையாள அட்டையை திரு. பி. மாணிக்கம் என்பவரும், சங்கானை மேற்கு பனிப்புலத்தைச் சேர்ந்த திரு. சிவபாதம் செல்லையா என்பவரின் அடையாள அட்டையை திரு. பா. சிவகடாட்சமும், ஸ்ரீமலை கூவில் சேர்ந்த திரு. கிருஷ்ணன் பஞ்சலிங்கம் என்பவரின் அடையாள அட்டையை திரு. கே. துரைசிங்கமும், நுணுவில் செம்பிமலை ஒழுங்கையைச் சேர்ந்த திரு நடேசன் குருபரன் என்பவரின் அடையாள அட்டையை திரு. எஸ். தேவரட்ணமும், கோண்டாவில் திரு. தங்கராசா ஜெயானந்தின் அடையாள அட்டையையும் பேர்ஸ்டன் கூடிய ஒரு தொகைப்பணத்தினையும் திரு. இ. தனபாலசிங்கமும் கண்டு எடுத்து சுழுதாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள் உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.



## ஓய்வு பெறுகிறார்

யாழ். முஸ்லிம் சமூகத்தில் ''தம்பி மாஸ்டர்'' என எல்லோராலும் அன்புடன் பேசப்படும் அதிபர் ஜனாப் எம். எச். எம். எம். முஹிதீன் தனது 36 வருட கால கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

யாழ். மஸ்ற உத்தின் பாடசாலை, யாழ் சன் மார்க்க போதனா பாடசாலை, யாழ் கோப்பாய் சாதனா பாடசாலை ஆகியவற்றின் பழையமாணவரான இவர் அமுத்காமம் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் பயிற்றப்பட்ட ஆசிரியராக யாழ் மஸ்றஉத்தின் பாடசாலையில் நியமனம் பெற்றார். பின்னர் யாழ் கதீஜா மகளிர் கல்லூரி என அழைக்கப்படும் யாழ் முசம்மதியா பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி மீண்டும் யாழ் மஸ்றஉத்தின் பாடசாலையில் ஆசிரியராகவும் அதிபராகவும் சேவையாற்றினார்.

36 ஆண்டு காலம் கடமையுணர்வும், செய்தொழில் பற்றும் கொண்டு சேவையாற்றி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மட்டுமன்றி முழுச் சமூகத்திற்கும் நல்லாசானுய் ஆசானுய் திகழ்ந்த இவர் மர்ஹூம் முகம்மது கௌது தம்பதிகளின் ஏக புதல்வராவார்.


**இடமாற்ற அறிவித்தல்**
எனது காரியாலயத்தை
''கலைக்கோவில்''
கோண்டாவில் ரோட்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்
(ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு அண்மையில்)
என்ற விலாசத்திற்கு மாற்றியுள்ளேன்.
வாடிக்கையாளர்கள் மேல்கண்ட விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்.
கா. கந்தையா
சோதிடரும், இளைப்பாறிய ஆசிரியரும். 150

# யாழ். ஆஸ்பத்திரியில் ஏற்பட்டுள்ள பெரும் மருந்துத் தட்டுப்பாடு!

## ஆறு மாதத்துக்குரியதை வைத்து ஒரு வருடத்துக்கு சமாளிக்கிறார்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் பெரும் மருந்துத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நோயாளிகள் டாக்டரினால் பரிசோதனை செய்தபின்னர் வெறுங்கையுடன் வீடு திரும்பும்நிலை ஏற்பட்டுள்ளது.

நோயாளிகளில் சிலர், வெளியிலுள்ள தனியார் மருந்து விற்பனை நிலையங்களில் மருந்துகளை வாங்கிச்செல்கின்றனர்.

இதுபற்றி ஆஸ்பத்திரி வட்டாரங்களில் விசாரித்தபோது ஆறுமாதத்திற்குரிய மருந்துகள், வந்து சேரவில்லையென்றும், அரை வருடத்திற்குரிய மருந்துகளை வைத்துக்கொண்டு அவற்றை ஒருவருடத்திற்குச் சமாளிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

டிசம்பர் மாதம் வரைக்குமான மருந்துகள் வழக்கத்தில் செப்டம்பர் இறுதியில் வருமென்றும், ஆனால் இம்முறை வரவில்லையென்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

பன்டேஜ் துணிகளுக்குப் பெரும்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [க]

## இந்திய மீனவர்கள் கைது

(கொழும்பு)

இலங்கை கடற் பிராந்தியத்தில் மீன் பிடித்த 85 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மீது வழக்குத் தொடரப்படவுள்ளது.

17 மீன்பிடிப் படகுகளில் வந்த இந்தியமீனவர்களே வடபகுதி துறைமுகங்களில்வைத்து கைது செய்யப்பட்டனர்,

இந்திய மீனவர்கள் இலங்கையின் கடற் பிராந்தியத்தில் மீன்பிடிப்பதாக யாழ்ப்பாணம் மன்னார் பகுதி மீனவர்கள் அரசுக்கு புகார் செய்திருந்தனர்.

### இலங்கைத்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சியின் பிரசாரக் குழுத் தலைவர் என்றவகையில் சிவாஜி கணேசன் வரவிருக்கும்பொதுத் தேர்தலில் மேற்கொள்ளவேண்டிய பிரசார நடவடிக்கைகள் தொடர்பாகவும் இந்தியப் பிரதமருடன் பேசினார்.

பின்னர் இந்திரா காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. ராஜீவ் காந்தியுடனும் இவர் பேச்சுவார்த்தை நடத்தினார். ராஜீவ் காந்தி இம்மாத இறுதியில் தமிழ்நாடு வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (சூ)

### வடக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உண்மை நிலையைத் தெளிவாகப்புரிந்துகொள்ள இது தக்கதோர் சந்தர்ப்பமாக அமையும் என்று அமைச்சர் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தார்.

கைதடியில் இடம்பெற்ற சூட்டுச்சம்பவத்தில் பலியானவர்களின் விபரங்களையும், அவர்களின் குடும்ப விபரங்களையும் ஜனாதிபதியிடம் அமைச்சர் கையளித்தார். சம்பந்தப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

கைதாகி விடுதலைசெய்யப்படாமலிருந்துவரும் பிள்ளைகளின் தாய்மாரின் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் ஜனாதிபதியிடம் திரு. ராஜதுரை கையளித்தார். திருகோணமலையில் கைதாகி காவலில் வைக்கப்பட்டவர்களின் மனைவிமார் அனுப்பியுள்ள மனுவின் பிரதிகளையும் ஜனாதிபதியிடம் அவர் கொடுத்தார். சம்பந்தப்பட்டவர்கள் மீதான விசாரணைகளைத் துரிதப்படுத்தும்படி அவர் கேட்டுக்கொண்டார். அமைச்சரின் கோரிக்கை பற்றி நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## சட்டவிரோத மின்பாவனை கண்டுபிடிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் மாநகரசபையின் அங்கீகாரம் பெருமல் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பாவிக்கப்பட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒன்பது கடைகளிலிருந்து மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாநகரசபை மின்சார உத்தியோகத்தர்கள் நேற்று யாழ் நகர மத்தியில் உள்ள கடைகள்மீது திடீர் பரிசோதனை மேற்கொண்டபோது மின்சாரம் களவாகப் பாவிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

மின்சாரம் துண்டிக்கப்பட்ட கடைகளின் உரிமையாளர்களிடமிருந்து மின்சாரம் பாவிக்கப்பட்டதற்கான கட்டணம் அறவிடப்படுவதுடன், விதிமுறையை மீறியதற்கான தண்டனையும் வழங்கப்படும் என்று யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

சட்ட விரோதமாக மின்சாரம் பாவிப்பவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுப்பதுடன் தொடர்ந்து அவர்களுக்கு மின்சாரம் வழங்குவதுகுறித்து மீள் பரிசீலனைசெய்யப்படுமென்றும் அவர் தெரிவித்தார். [மா]

### சடலம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

புகார் செய்துள்ளார்.

ஆஸ்பத்திரிப் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த இரு சடலங்கள், இனந்தெரியாதவர்களால் நேற்றுமுன்தினம் கடத்திச் செல்லப்பட்டதாக அப்புகாரில் தெரிவித்துள்ளார்.

### தஞ்சம் தா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரியவருகிறது.

கடந்த 83ம் ஆண்டு இடம்பெற்ற ஜூலைக் கலவரத்தினால் பாதிக்கப்பட்டு அந்நாட்டுக்குச் சென்ற சுமார் 1600 பேர் அகதிகளாகத் தஞ்சம் கோரியிருந்தனர். [மா]

## பாதுகாப்புஊழியர் கைது

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை லங்கா சிமெந்து லிமிட்டெட் துறைமுகப்பகுதியில் வேலைசெய்யும் பாதுகாப்பு ஊழியரொருவர் நேற்று நண்பகல் விசாரணைக்காக இராணுவத்தினரால் அழைத்துச்செல்லப்பட்டார்.

காங்கேசன்துறை ஐயனார் கோவிலடி பிரதான வீதியில் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகவே இவர் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

### இராணுவம்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்று மாலை பலத்த சோதனைகளை மேற்கொண்டனர். வீதியால் வந்த வாகனங்களும், பாதசாரிகளும் கடும் சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

### கடத்தப்பட்ட...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இருசடலங்களும் ஒரே சிதையில் வைக்கப்பட்டுத் தீ மூட்டப்பட்டதாகவும் இதனை அப்பகுதியிலுள்ள பொதுமக்களும் பார்வையிட்டதாகவும் கூறப்படுகிறது.

கடந்த புதன்கிழமை பிற்பகல் மயிலிட்டிப் பகுதியில் இராணுவத்தினர் சோதனை நடாத்தியபொழுது, இனந்தெரியாத நபர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததும் அதில் இருவர் மரணமடைந்ததும், பின்னர் இறந்த இருவரின் சடலங்களும் யாழ். ஆஸ்பத்திரிப் பிரேத அறையில் வைக்கப்பட்டு அடுத்த நாட்காலை கடத்திச் செல்லப்பட்டது தெரிந்ததே. [மா]

### பிரி. பிரதமர்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெடித்துமாடிக்கட்டிடத்தின் மூன்று மாடிகளைத் தகர்த்தெறிந்தது. ஹோட்டலின் முன்பகுதி சரிந்துவிழுந்தது,

நால்வர் ஸ்தலத்தில் மரணமானார்கள். 26 பேர் காயம் அடைந்தார்கள்.

திருமதி தாட்சர் மகாநாட்டில் பேசவிருந்த சமயத்தில் குண்டு வெடித்தது. அவர் உடனே பாதுகாப்புடன் வேறு இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். மகாநாட்டின் இறுதித் தினத்தில் இந்தச்சம்பவம் நடந்தது கூட்டத்தை இக்கட்டிடத்திலிருந்து சுமார் 100யார்தூரத்தில் தொடர்ந்து நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

காயமடைந்தவர்களில் தாட்சர் அமைச்சரவையின் அமைச்சரும் இருவர்.

இக்குண்டு வெடிப்புச் சம்பவத்திற்கு ஐரிஷ் குடியரசு இராணுவம் உரிமைகோரியுள்ளது.

## விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களையடுத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமையும், நேற்று வெள்ளிக்கிழமையும் அப்பகுதிகளிலுள்ள சில இளைஞர்களையும், குடும்பஸ்தர்களையும் பயங்கரவாதத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் விசாரணைக்காக அழைத்துச்சென்றதாகக் கூறப்படுகிறது.

இவர்களில் வேலைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் அடங்கியிருப்பதாகக் கூறப்பட்டது.

## ‘லலித்’தை கல்விமான்கள் குழு சந்தித்தது

(கொழும்பு)

வடபகுதி கல்விமான்கள் குழு நேற்று தேசிய பந்தோபஸ்து அமைச்சரை சந்தித்தது.

அமைச்சர் ‘லலித்’ அத்துலத் முதலி இவர்களின் கோரிக்கைகளை அனுதாபத்துன் கேட்டறிந்துகொண்டார்.

இக்குழுவில் வடமாநிலக் கல்விப்பணிப்பாளரும், பிரபல கல்லூரிகளின் அதிபர்களும், ஓய்வுபெற்ற அதிபர்களும் அடங்கியிருந்தனர். (இ-வெ)

### காலி பூஸா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தங்களை உரியவர்களிடம்சேர்ப்பிக்குமாறு வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு உறுப்பினரிடம் கையளித்தார்

காலி பூஸா முகாமிலுள்ள இளைஞர்களில் சிலர் அடுத்த வாரம் விடுதலை செய்யப்படவுள்ளதாகவும் யாழ். அரச அதிபர்தெரிவித்தார். (வெ)

### செய்திகளுக்கு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாசிரியர்கள் மகாநாட்டில் தேசிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்த்தன தெரிவித்தார். பயங்கரவாதம் தொடர்பான செய்திகளைப் பிரசுரிக்கலாம் என்றும், பாரதூரமான விடயங்கள்பற்றிய செய்திகள் தொடர்பாக ராஜாங்க அமைச்சின் செயலாளர் மற்றும் அதிகாரிகளுடன் தொடர்புகொள்ளலாமென்றும் அவர் கூறினார்.

இனப் பிரச்னைக்குத் தீர்வு காண முயற்சிகளை மேற்கொண்டுள்ள ஜனாதிபதிக்கு பொறுப்பு வாய்ந்த பத்திரிகை ஆசிரியர்கள் உதவ வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### டாக்டர் K. ஆறுமுகம்

டாக்டர் கே ஆறுமுகம் (R. M. P.) காலமானார். இவர் திருமதி சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், ஸ்ரீஸ்கந்தராஜா [றிச்சாட் பீரிஸ்], தங்கராணி, ரட்ணராஜா [ஹென்றி காமன்ஸ்], விக்னராஜா [ஜபார்ஜீஸ்] ஆகியோரின் அன்புத் தந்தையும், லோர்னு - வைத்தீஸ்வரன் [எக்கவுண்டன்ற் ஹோம் பிஞன்ஸ் முன்னாள் சினிமா அன்ட் ரில்லீஸ் குரூப்]. பத்மினி, புஷ்பம் ஆகியோரின் மாமனாரும், சிந்தாமணி, நன்னிப்பிள்ளை, பொன்னு, அன்னபூரணம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற ஆறுமுகம், காலஞ்சென்ற விஸ்வலிங்கம், குமாரசாமி, ரட்ணசிங்கம், அழ ரட்ணம், காலஞ்சென்ற விஜயரட்ணம், காலஞ்சென்ற டாக்டர் தர்மரட்ணம், சபாரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். ஈமக்கிரிகைகள் அராலி கிழக்கு ‘‘கமல வாசா’’ வில் 13-10-84 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

188

## மரண அறிவித்தல்

### சூசைமுத்து இராசேந்திரம்

மண்டைதீவு சூசைமுத்து இராசேந்திரம் காலமானார். இவர் காலஞ்சென்ற அரோக்கியம் செல்லாச்சியின் அன்புக் கணவரும், திரு கிறிஸ்தோத்திரத்தின் [தமிழ்ச் செல்வி ஸ்ரோர்ஸ் மண்டைதீவு] அன்புத் தந்தையும், திருமதி தர்மசீலி கிறிஸ்தோத்திரத்தின் அன்பு மாமனாரும், சொல்வி, அலெக்சாண்டர், தமிழ்ச்செல்வி (யாழ் திருக்குடும்ப கன்னியர்மடம் ஆங்கிலப்பாடசாலை மாணவி) அவர்களின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் மரணச்சடங்கு மண்டைதீவு புனிதபோதுருவானவர் சேமக்காலையில் இன்று (13-10-84) சனிக்கிழமை பி. ப 4-00 மணிக்கு நடைபெறும். இதனை உறவினரும் நண்பர்களும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இ. கிறிஸ்தோத்திரம்
4ம் வட்டாரம், மண்டைதீவு.

196

## மரண அறிவித்தல்

### திரு எஸ். சுந்தரம்பிள்ளை

(ஆர். எஸ். நடராசா அன்கோ உரிமையாளர்- 2ம் குறுக்குத் தெரு, கொழும்பு)

திரு எஸ். சுந்தரம்பிள்ளை காலமானார். இவர் மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும், சுரபி, இராஜன், றிஜ், சுஜி, சுமந்திரன், சியாமா ஆகியோரின் தகப்பனும், சந்திரகுமார், பாமா, மோரு, ஹரிபத்மநாதன் ஆகியோரின் மாமனுருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை ஞாயிற்றுக்கிழமை (14-10-84) காலை 9 மணிக்கு 55, விவேகானந்தா வீதி வெள்ளவத்தையிலிருந்து தகனக் கிரியைகளுக்காக கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

194

இப் பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegramnumber Telephone 22389 - 24126.